Registered as a News Paper பக்கங்கள்: 08 விலை ரூபா: 6-00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2023 தை 03 (17-01-1992) வெள்ளிக்கிழமை ஓசை: 333

## தொண்டர்ஆசிரியருக்கு நிரந்தர நியமனம்

யாழ். மாவட்டத்தில் வசதிகள் சேவைகள் கட்டணத்தில் சம்பளம் வழங்கப்படும் தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் இந்த மாத இறுதிக்குள் வழங்கப்படவுள்ளது. 1990 இல் நடைபெற்ற நேர்முகத் தேர்வில் தெரிவு செய்யப்பட்ட 1020 தொண்டர் ஆசிரியர்களுக்கே நியமனம் வழங்கப்படவுள்ளது. இவர்களது கல்விச் சான்றிதழ் மற்றும் ஆவணங்கள் பரிசிலிக்கப்பட்டு நியமனக் கடிதங்கள் வழங்கப்படும் எனத் தெரிவிக் (8ம் பக்கம் பார்க்க)

# மன்னாரில் புலிகள் அதிரடி

# 10 படை பலி: பலர் காயம்

(மன்னார்)

மன்னார் மாவட்டம் சின்ன குஞ்சுக்குளம் மடு ரோட்டிற்குச் சமீபமாகவுள்ள மாதிரிக்கிராம இராணுவ முகாமிலிருந்து வெளியேறி தடைகளை அகற்ற முய்ன்ற சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட அதிரடித் தாக்குதலினால் பத்து சிறிலங்கா இராணுவத்தினர் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டனர். பல நவீன ரக ஆயுதங்கள் விடுதலைப் புலிகளினால் கைப்பற்றப்பட்டன.

நேற்று காலை 7.45 மணியளவில் இந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. புதிதாக அமைக்கப்பட்ட மாதிரிக் கிராம இராணுவ முகாமிலிருந்து வெளியேறிய இருபது சிறிலங்காப்படையினர் மீது, முகாமிலிருந்து 350 யார் தூரத்தில் வைத்து விடுதலைப் புலிகளின் அணியொன்று அதிரடித் தாக்குதலை மேற்கொண்டது. இந்த திடீர்த் தாக்குதலால் பத்து சிறிலங்கா படையினர் கொல்லப்பட்டனர். ஏனையோர் காயங்களுடன் முகாமிற்கு தப்பியோடி விட்டனர். புலிகள் தரப்பில் சேதம்எதுவும் ஏற்படவில்லை.

## மீட்கப்பட்ட ஆயுதங்கள்

(மன்னார்)

மன்னாரில் மாதிரிக் கிராமம் சிறிலங்கா இராணுவ முகாமின் அருகில் இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதலின் போது விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு:

★ ரி 56-2 ரகதுப்பாக்கிகள்-2

(8 ஆம் பக்கம் பார்க்க)

## குடியிருப்புக்கள் மீது எறிகணை வீச்சு

(பொன்னாலை)

காரைநகர், திருவடிநிலை ஆகிய கடற்பகுதிகளில் இருந்து மூளாய், பொன்னாலை, சுழிபுரம் போன்ற பொதுமக்கள் வாழும் பகுதிகளை நோக்கி சிறிலங்கா கடற்படையினரால் பீரங்கித் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது.

புதன்கிழமை இரவு 8.45 மணி முதல் தொடர்ச்சியாக நேற்று அதிகாலை வரை நடாத்தப்பட்ட இத்தாக்குதல்களின் போது பல பீரங்கிக்குண்டுகள் (8 ஆம் பக்கம் பார்க்க)

## 18 மாதப் போரில் 2,000 இராணுவம் பலி

சிறிலங்கா இராணுவத்துக்கும் புலிகளுக்குமிடையிலான போரில் சிறிலங்கா இராணுவம் கடந்த பதினெட்டு மாதங்களில் 2,000 படையினரை இழந்துள்ளது. இத்தகவலை பாதுகாப்பு வட்டாரங்கள் வெளியிட்டுள்ளன.

## சிங்களக் குடியேற்றம் திருமலையில் தீவிரம்

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்டத்தில் சிங்களக் குடியேற்றங்கள் துரிதகதியில் நடைபெற்றுவருகிறது. திருக்கோணமலை அநுராதபுரம் வீதியில் 10ஆம் கட்டை கித்துமுத்து பகுதியில் சிறிலங்காஇராணுவ உதவியுடன் சிங்கள குடியேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப் படுகிறது.

1983 இல் இப்பகுதியில் நடைபெற்றசிங்களகுடியேற்ற நடவடிக்கைகள்இடைக்காலத் (7ஆம் பக்கம் பார்க்க)

# தென்னிலங்கையிலிருந்து நல்லெண்ண தூதுக்குழு

(கொழும்புத்துறை)

கத்தோலிக்க திருச்சபையின் தூதுக்குழுவொன்று சமாதானத்திற்கான முயற்சிகளை மேற்கொள்ளும் முகமாக யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவுள்ளது.

கண்டி, குருநாகல், மட்டக்களப்பு ஆயர்கள், ஏழு துறவற சபைகளின் தலைவர்கள் இத் தூதுக்குழுவில் இடம்பெறுகின்றனர். சமாதானத்துக்கான இத்தூதுக்குழு யாழ். நகர் வருவதற்கான அனுமதியைப் பெறுவதில் துரிதம் காட்டிவருகின்றது.

மேலும் இந்த நல்லெண்ணத் தூதுக்குழுவில் இருபுத்த பிக்குகளும் இடம் பெறலாம் (8 ஆம் பக்கம் பார்க்க)

## ஐக்கியம், சமாதானம்; அரசு முக்கிய கவனம் -பெஸ்டஸ் பெரேரா

ஐக்கியம்,சமாதானம் ஆகிய விடயங்களிலேயே இந்த அரசாங்கம் முக்கிய கவனம் செலுத்துகின்றது என்று பொது நிர்வாக அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் வட-கிழக்கு முகாமைத்துவ பயிலுநர்கள் மத்தியில் பேசிய போதே பெஸ்டஸ் பெரேரா இதனைத் தெரிவித்தார்.

அரசாங்கத்திற்கும், ஜனாதிபதிக்கும் அமைதியை நிலை (8 ஆம் பக்கம் பார்க்க)

## எட்டியாந்தோட்டை எம்.பி. வின்சன்ட் பெரேரா கைது

முன்னாள் எட்டியாந்தோட்டை எம். பி. வின்சன்ட் பெரேரா செவ்வாய்க்கிழமை இரவு கைதுசெய்யப்பட்டதாக எட்டியாந்தோட்டைப் பொலிசார்தெரிவித்துள்ளனர்

எட்டியாந்தோட்டை நகரிலுள்ள பெற்றோல் நிரப்பு நிலையத்தை பெற்றோலிய கூட்டுத்தாபன அதிகாரிகள் பொறுப்பேற்க வந்தபோது (7ஆம் பக்கம் பார்க்க)

## 'இலங்.இனப்பிரச்சினையின் அடிப்படைகள்' நூல் வெளியீடு

''இலங்கைஇனப்பிரச்சினையின் அடிப்படைகள்'' என்ற திரு. மு. திருநாவுக்கரசு அவர்கள் எழுதிய நூலின் வெளியீட்டு விழா நாளை காலை (8 ஆம் பக்கம் பார்க்க)

## குவைத் சென்ற 71 பேரில் 65 பேர் கொழும்பு திரும்பினர்

### 6 பெண்கள் பற்றி தகவலில்லை

(கொழும்பு)

வேலை வாய்ப்புத்தேடி குவைத் சென்ற எழுபத்தியொரு பேர்களில் அறுபத்தைந்து பேர் வேலைவாய்ப்பின்றி நாடு திரும்பினர் என்றும் அவர்களுடன் சென்ற ஆறு பெண்களின் நிலை குறித்து தெரியவில்லை என்றும் கொழும்பிலிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கொழும்பிலுள்ள இரு வேலை வாய்ப்பு முகவர் (8 ஆம் பக்கம் பார்க்க)

## சிறிலங்காவிற்கான உதவிகளை நிறுத்துக;

# உதவி வழங்கும் நாடுகளிடம் யா.பிரசைகள்குழு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வெளிநாடுகள் வழங்கும் உதவிகளை அபிவிருத்தி வேலைகளுக்குப் பயன்படுத்தி வருவதாக சிறிலங்கா அரசு வாதிடலாம். 1992 இல் யத்தச் செலவுகளுக்கென 375 மில்லியன் அமெரிக்க டாலரை ஒதுக்கிய சிறிலங்கா அரசு மற்றத் தேவைகளுக்கு வெளிநாட்டு உதவியை எதிர்பார்ப்பது நீதி நியாயமற்றது என்று யாழ்ப்பாணம் பிரசைகள் குழு சிறிலங்காவுக்கு உதவி வழங்கும் நாடுகளுக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் தெரிவித்துள்ளது.

உலகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட உரிமைகளைக் கோரும் வடக்குக் கிழக்குத் தமிழ் மக்களுக்கு எதிராக சிறிலங்கா அரசு நீண்டகால அநியாயமான யுத்தத்தைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது. உதவும் (8 ஆம் பக்கம் பார்க்க)

## கட்டாக்காலி நாய்களை ஒழிக்க ச.தேச செஞ்சிலுவை உதவி

(யாழ்ப்பாணம்)

கட்டாக்காலி நாய்களை ஒழித்து சுகாதாரத்தைப்பேண சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் நிதியுதவமுன்வந்துள்ளது.

யாழ். மாவட்டத்தில் கடந்த பல மாதங்களாக அதிகரித்து வரும் நோய்களையும், அதனால் ஏற்படும் அநியாய உயிரிழப்புக்களிலும் இருந்து மக்களைப் பாதுகாக்கும் நோக்குடனேயே மேற்படி சங்கம் கட்டாக்காலி நாய்களை ஒழிக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

கட்டாக்காலி நாய்களைப் பிடிப்பதற்குத் தேவையான வாகனங்களை வழங்கவோ அல்லது அவற்றை அழிப்பதற் (8 ஆம் பக்கம் பார்க்க)

சகல விதமான அச்சு வேலைகள்,
சகல விதமான அச்சுத் தாள்களில்
சகல வர்ணங்களிலும் செய்துகொள்ள

நாடுங்கள்

ஈழநாதம்
31, மகேந்திரா வீதி, (வைமன் வீதி)
யாழ்ப்பாணம்.

★ அரச, தனியார் நிறுவனங்கள், தனியார் வேலைகள் யாவும் குறித்த நேரத்தில் செய்து கொடுக்கப்படும்.

★ இரவு 10 மணிவரை அச்சுவேலைகள் ஏற்கப்படும்.

இ. 5


# தமிழரின் உடைமையில் இராணுவம் பயிர்ச்செய்கை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வெல்லாவெளி பகுதியில் உள்ள மக்கள் இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து உள்ளனர் இவர்களின் உடைமைகள் கொள்ளையடிக்கப்பட்டதோடு மக்களின் வயல் நிலங்களில் இராணுவம் நெற் செய்கையில் ஈடுபட்டுள்ளது.

இப்பகுதி வயல்களை பண்படுத்த தமிழ்மக்களின் உழவு இயந்திரங்கள் பலாத்காரமாக பறித்துச் செல்லப்பட்டதோடு அவர்களின் விதை நெல்களே விதைக்கப்பட்டும் உள்ளன.

கோயில்கள், வீடுகள், பாடசாலைகள் தரைமட்டமாக்கப் பட்டுள்ளன அப்பகுதியில் இராணுவம் முகாமிட்டுள்ளது.

## வரி விளம்பரம்

### சோதிடம்

அதிர்ஷ்ட எண்களில் பெயரமைக்க, திருமணப் பொருத்தம் பார்க்க, வெளிநாட்டு ஜாதகம் எழுத, உங்கள் பிள்ளைகளின் எதிர் காலம் பற்றி சிந்திக்கும் நேரத்தில் சந்தித்துப் பாருங்கள் வேலணை சோதிடர் V.A. சிவராசா, 152 B அரசடி றோட், கந்தர் மடம், யாழ்ப்பாணம்.

(2104)

### ரூபா 1000 பரிசு

''நொடியும் விடையும்'' விடுகதைத் தொகுப்பின் மூன்று பாகங்களும் இப்போது மீண்டும் கிடைக்கின்றன. பரிசு ஆயிரம் ரூபாவுக்கான போட்டியும் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆசிரியர் ''கோப்பாய் சிவம்''

(2095)

## முக்கிய அறிவித்தல்

அசல் ஆர். வி. ஜி. பீடிகளைப் போல் ஒரு சில நபர்களால் தரத்திலும் விலையிலும் குறைந்த போலி ஆர். வி. ஜி. பீடிகளை விற்பனை செய்வதாக அறிய வந்துள்ளோம். அசல் ஆர் வி. ஜி. பீடியின் விலையில் மாற்றம் எதுவும் இல்லை.

குறைந்த விலையில் போலி ஆர். வி. ஜி. பீடி விற்பனை செய்பவர்களை இனம்கண்டு எமக்குத் தகவல் தருமாறு பீடி விற்பனையாளர்களை அன்புடன் வேண்டுகின்றோம். போலி பீடி விற்பனையாளர் பற்றிய

தகுந்த தகவல் தருபவர்களுக்கு
தக்க சன்மானம் வழங்கப்படும்.

**ஆர். வி. ஜி. நிர்வாகம்**
58, குறுக்கு வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(2099)

## "கலாவதி" வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

பலாலி ஆசிரிய கலாசாலையின் வருடாந்த 'கலாவதி' மலர் வெளியீட்டுவிழா இன்று 17ஆம் திகதி காலை 10 மணிக்கு கலாசாலை மண்டபத்தில் நடைபெற உள்ளது. விழாவிற்கு கலாசாலை அதிபர் ஆர்.எஸ் நடராஜா தலைமை வகிப்பார்.

## செயலக ஊழியருக்கு அடையாள அட்டை

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலக ஊழியர்களை அடையாளம் கண்டு கொள்வதற்கு வசதியாக நீண்ட இடைவெளிக்குப் பின்னர் ஒவ்வொரு ஊழியர்களுக்கும் ஊழியர் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. (க,ச)

## முயற்சி வெற்றி

(கொழும்பு)

இயற்கையாக அமைந்திருக்க வேண்டிய இடத்தில் அல்லாமல் திசைதிரும்பி இருக்கும் மனித இதயங்களை வழமை நிலைக்குக் கொண்டு வருவதற்கு எடுத்த முயற்சிகள் வெற்றியளித்துள்ளன.

இதுவரை மேற்படி சிகிச்சைக்குட் படுத்தப்பட்டவர்களில் பத்து வீதமானவர்களே இறந்துள்ளனர். இச்சிகிச்சை கொழும்பு ஜெயவர்த்தனபுர வைத்திய சாலையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.


## பூநகரி மாணவர்கள் கற்க ஏற்பாடு

(கிளிநொச்சி)

சிறிலங்கா இராணுவ நடவடிக்கையினால் பூநகரியிலிருந்து இடம்பெயர்ந்த மாணவர்களுக்கு பத்திரிப்பாய், முள்கொம்பன், ஜெயபுரம் ஆகிய இடங்களில் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வில்மடுவுக்கு அருகாமையில் மயில்வாகனபுரத்திலும் புதிய பாடசாலை ஒன்று நிறுவப்பட்டுள்ளது. சிங்களவர்களின் வன்செயல்களால் பாதிப்படைந்த மாணவர்களுக்கெனப் பிரத்தியேகமாக முருகண்டிப் பகுதியில் வரும் 20 ஆம் திகதி சிவபாத கலாலயம் என்ற பெயரில் பாடசாலை ஒன்று திறக்கப்படவுள்ளது, இத்தகவலைக் கிளிநொச்சிக் கல்விப் பணிப்பாளர் க. கந்தசாமி தெரிவிக்கின்றார்.

## 6ஆம் மாத நினைவலைகளும் அந்தியேட்டி அழைப்பும்



வீரப்பிறப்பு ❋ 17 - 12 - 1972

வீரச்சாவு ❋ 23 - 07 - 1991

### வீரவேங்கை குரு

வாமதேவன் விக்கினேஸ்வரன் (பாபு)
(தங்கோடை, காரைநகர்)

பெற்றோர் உடன் பிறந்தோர்
பாசமதைத்தான் துறந்து
மண்மீது மக்கள் மீது பரந்து பட்ட
பாசம் கொண்டு மண்ணின்
மைந்தனாகக் குரு எனப் பெயர்பெற்றாய்
ஆனையிறவு மண்மீட்புப் போரினிலே
இலட்சிய வெறி கொண்ட நீ
இனவெறி இராணுவத்தை எதிர்நின்று
போரிட்டு மாவீரன் ஆனவனே!
உள்ளக் கோயிலிலே உன்னை
வைத்து வணங்குகின்றோம்!

இன்று (17-01-92) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறவிருக்கும் அந்தியேட்டிக் கிரியை வைபவத்தில் விடுதலைப்புலிகள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மாரீசன் கூடல்.
காடு.
இளவாலை

- குடும்பத்தினர்.

(சி/3782)

## நினைவு கூருகின்றோம் 1992 - 01 - 17

1986ஆம் ஆண்டு இதே தினத்தில் ஆரையம்பதியில் சிறிலங்கா இரகசிய காவல் படையினரால் சுடப்பட்டு வீரச்சாவெய்திய

**இந்திரன் / முரளி** [ மயில்வாகனம்கந்தசாமி- கிரான்குளம், மட்டக்களப்பு ]

நாயாற்றுவெளியில் சிறிலங்காப்படையினருடனான நேரடி மோதலின் போது வீரச்சாவெய்திய

**றோஸ்மன்** [ பிரான்சிஸ் குரூஸ்இருதயநேசன்- அரிப்பு, சிலாபத்துறை முருங்கன் ]

பருத்தித்துறை இராணுவ முகாமில் சுட்டுக் கொல்லப்பட்ட, பருத்தித்துறை இராணுவமுகாமிற்கு பாண் விநியோகிக்கும் பொதுமகன்

குரும்பசிட்டி குப்பிளான், கட்டுவன், ஏழாலை பகுதிகளில் சிறிலங்காப்படையினரின் ஏழு மணிநேர அடாவடித்தனத்தினால் பலியான 6 பொதுமக்கள்

1987ஆம் ஆண்டு குறிஞ்சாத்தீவில் சிறிலங்காப்படையினருடனான நேரடி மோதலில் வீரச்சாவெய்திய

**லெப். சதா** [ எல்விஸ் திமதி பொனிவஸ் - சங்கத்தார்வயல், இயக்கச்சி ]

**லெப். ஜொனி** [ அன்பாயுதன் சீமான் - உதயநகர் மேற்கு, திருக்கோணமலை ]

**லெப். குகன்** [ சுப்பிரமணியம் சண்முகராசா - மந்துவில் ]

**அஜித்** [ ராஜன் - இயக்கச்சி ]

**லெப். அருச்சுனா** [ ஜெயபாலன் - கல்வயல், சாவகச்சேரி ]

இதே சம்பவத்தில் சிறிலங்காப்படையினர் உலங்கு வானூர்தி தாக்கியதில் வீரச்சாவெய்திய

**சுமன்** [ இளையதம்பி ஜெயானந்தராசா - முகமாலை, எழுதுமட்டுவாள் ]

இதே ஆண்டு வீரச்சாவெய்திய

❋ **நமசிவாயம்** [ தங்கநகர், மூதூர் ]

கதிரவெளியில் சிறிலங்காப் படையினரால் கைது செய்யப்பட்டு வாகரை இராணுவமுகாமில் சித்திர வதை செய்து கொல்லப்பட்ட

❋ **கமல்** [ ஆறுமுகம் நல்லதம்பி - அலிஒலுவ, மூதூர் ]

1988ஆம் ஆண்டு தெல்லிப்பளையில் இந்தியப்படையினரின் முற்றுகையின் போது ஏற்பட்ட நேரடி மோதலில் வீரச்சாவெய்திய

**அசீஸ்** [ நடராசா விமலச்சந்திரன் - செருக்கப்புலம், அம்பனை தெல்லிப்பளை ]

1989ஆம் ஆண்டு மாமடுவில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய

**ரகு** [பூவிலிங்கம் தாஸ்நிதி- ஊரெழு மேற்கு]

களுதாவளையில் இந்தியப்படை மற்றும் தேச விரோதிகளின் சுற்றிவளைப்பில் காயமுற்ற நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய

**நிசாம்/றிச்சாட்** [ குழந்தைவேல் ராஜேந்திரன் - 37ஆம் கிராமம், பக்கியெல்ல, களுதாவளை - 03 ]

இதே சம்பவத்தில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய

**சோமன்** [ சோமசுந்தரம் - களுவாஞ்சிக்குடி ]

வவுனியா - பூந்தோட்டம் பகுதியில் திருமண வைபவத்திற்குச் சென்று கொண்டிருந்த போது சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 13 தமிழர்கள்.

நெடுந்தீவு பனங்காணி முனையில் கடற்படைப் படகினால் மோதிக் கொல்லப்பட்டபலாலியைச் சேர்ந்த மீனவர்

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்**

❋ மேற்குறிப்பிட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்,

**விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி**

(சி 3796)



## லெப். முரளி

உணவு தந்தவர்கள் உரிமையும் பெற்றுத் தருவார்கள் என்று நம்பிய ஈழத்தமிழினத்தின் குரல்வளை அமைதியின் பெயரால் திருகப்படத் தொடங்கிய அதேவேளை- இந்திய வல்லாதிக்க பூதத்தின் கோரக் கரங்களைக் கண்டு அகதிகளாய் அங்குமிங்கும் எம்மக்கள் ஓடிக்கொண்டிருந்த காலம். அக்காலத்தில் ஒரு நாள் விநோதமான, பயங்கரமான ஒலிகளை எழுப்பியபடி வந்து கொண்டிருந்தது T52 டாங்கி ஒன்று, அதன் பின்னால் இந்தியத்தயாரிப்பான ஜீப்பொன்றில் ஆறு இந்திய இராணுவத்தினர். டாங்கியின் சத்தம் கேட்டு வீடு வாசல்களைப் பார்க்க வந்த மக்கள் எல்லாம் கண்ட திசையெல்லாம் ஓடிக்கொண்டிருந்தனர். வெற்றி மமதையுடன் வந்த அந்த வாகன அணியை எதிர்பார்த்துக்காத்துக் கிடந்தான் முரளி.

உடுவில், சங்குவேலி, சண்டிலிப்பாய் வழியாக வந்த அந்த டாங்கி மல்லாகம் வீதியுடன் இணைந்த சங்கானைச் சந்தியை வந்தடைந்ததும் கண்ணி வெடியுடன் இணைக்கப்பட்டிருந்த ஆழியை அழுத்துகின்றான் முரளி.. அடுத்து நடந்ததை விபரிக்க அவனாலே முடியவில்லை. அவனால் எதிர்பார்க்கப்பட்டது தான் நடந்தது. ஆனால் அது இப்படியிருக்குமென அவன்கற்பனை செய்யவில்லை. அப்படியொரு சத்தம்! மெல்லக் கழுத்தை நிமிர்த்துகிறான். அவன் முன்னே ஒரு குடல் விழுகிறது.

புகைமண்டலம் அடங்கியதும் மின்சாரக் கம்பிகளில் உடலுறுப்புக்களும் இந்திய இராணுவத்தினரின் ரீஷேர்ட்டும் தொங்குவதைக் கண்டான். டாங்கி எப்படியிருக்கின்றது என்று பார்த்தான். அது குத்துக்கரணமடித்துக் கவிழ்ந்திருந்தது. அன்று கவிழ்ந்தது சோவியத்தின் T52 டாங்கி மட்டுமல்ல. தென்னாசியாவின் முடிசூடா மன்னர் தாமே என்று நினைத்துக் கொண்டிருந்தவரின் ஆணவம்- பாகிஸ்தான் போர், சீனப் போர் எல்லாம் கண்ட எமக்கு முன்னால் நிற்க இவர்கள் எல்லாம் யார்? என்று மமதையுற்றிருந்த இந்திய இராணுவத்தின் இராணுவத் திறன் - எல்லாமேதான்.

ஜீப்பில் வந்த இராணுவத்தினரை மரணப்பயம் தொற்றுகிறது. இனி அதிஷ்டம் மட்டுமே தமக்குக் கைகொடுக்க முடியுமென தீர்மானிக்கின்றனர். ஒவ்வொரு கணத்தாமதமும் உயிரைக்குடிக்கவல்லது என முடிவு கட்டிய அவர்கள் இந்த நிகழ்ச்சியைக் கண்டு அதிசயித்துப் போயிருந்த பொதுமகன் ஒருவரை மிரட்டி வழிகேட்டுத் தப்பியோடுகின்றனர். ''ஆம்... இப்படியெல்லாம் நடந்தது! இதெல்லாம் எமக்கு வந்த நாடு பிடிக்கும் ஆசையால் வந்த வினை' என்




றெல்லாம் தமது பிள்ளைகளுக்குச் சொல்ல அவர்கள் உயிரோடு இருக்கவேண்டும்'' அதற்காக ஓடினார்கள்.

கண்ணிவெடி வெடித்ததைக் கேட்டு சித்தன்கேணியிலும் மற்றும் அதனைச்சூழவுள்ள பகுதிகளிலும் போருக்குத்தயாராக இருந்த ஏனைய வீரர்கள் சங்கானையை நோக்கி விரைகின்றனர். சிரித்தபடியே ஓடிவரும் முரளியைக் கட்டியணைத்து முத்தமிடுகின்றனர். இது அவனது முதல் கண்ணி வெடி அனுபவம். சோவியத் சாம்ராஜ்யத்தின் இராணுவ நிபுணர்களின் முழு ஆற்றலின் வெளிப்பாடாக உருவாக்கப்பட்ட இந்த T52 டாங்கியை கவிழ்த்தவன் ஒரு சாதாரணப் போராளி. பயிற்சியளிப்பதற்கென உள்ள முகாம்களில் பயிலாதவன். அந்தந்தப் பிரதேசப்பொறுப்பாளர்களினால் கிராம மட்டத்தில் இருந்த முகாம்களில் சாதாரணப் பயிற்சி பெற்றவன். ஆனால் அந்தப் பயிற்சியில் இலட்சியத்தின் மீது பற்று - உறுதி - தாய்நாட்டிற்கான விசுவாசம் எல்லாம் மேலோங்கியிருந்தன. அதனால்தான் அவனால் இவ்வாறான சாதனையொன்றைச் செய்யமுடிந்தது.

சுழிபுரம், வட்டுக்கோட்டைப் பகுதி பிரதேசப் பொறுப்பாளராகவும் திலீபனின் மறைவைத்தொடர்ந்து யாழ். மாவட்ட அரசியற் பொறுப்பாளராகவும் விளங்கிய மேஜர் பிரசாத்தினால் உருவாக்கப்பட்டவன் முரளி. தினம் தினம் பிரசாத் கூறும் அரசியற் கருத்துக்களால் புடமிடப்பட்டவன். இயற்கையிலேயே முரட்டுத்தனமும் முன்கோபியுமாக விளங்கிய இவன் இயக்கக் கட்டுப்பாடு காரணமாக தனக்குத்தானே நாணயம் பூட்டிக் கொண்டான். 1985ஆம் ஆண்டிலேயே இவன் பிரசாத்திடம் பயிற்சி பெற்றாலும் இவனுக்குப் பிடித்தமான சண்டைகளுக்கு வாய்ப்புக் கிடைத்து இந்திய இராணுவத்தினருடனான போர்நிகழ்ந்தகாலத்தில்தான்' அக்காலத்தில் தான் ''தான் முழுமையாக உழைக்கின்றேன்'' என்ற உணர்வு அவனுக்கு ஏற்பட்டது.

வட்டுக்கோட்டை, அராலி, மாதகல் எல்லாப் பகுதிகளிலும் அவனுக்குச் சண்டையிட வாய்ப்புக் கிடைத்தது. இச் சண்டைகளே வீரத்திற்கு தமிழர்கள் என்ற முத்திரையைப் பதிக்க வைத்தன. முதன் முதலாக இந்திய இராணுவம் புலிகளிடம் கைதாகியது. உடுவிலில் அடிவாங்கிய இந்திய இராணுவ அணியொன்று சிதைந்து நாலா திசையும் ஓடத்தொடங்கியது. அதில் ஆறு பேர் ஒரு ட்றக்கில் சித்தன்கேணி வழியாக சுழிபுரத்தையடைந்தனர். இடையில் சம்பில் என்ற இடத்தில் ஒரு பாலம் உடைக்கப்பட்டிருந்தது. இவர்களுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. இதேவேளை இவர்கள் மேல் தாக்குதல் தொடுக்கப்பட்டது. இனித்தப்ப முடியாது என்ற நிலையில் கையை உயர்த்தியபடி சரணடைந்தனர் இந்திய இராணுவத்தினர். 5 எஸ். எல். ஆர் ஒரு ட்றக், ஆறு இந்திய இராணுவத்தினர் இவ்வளவையும் கைப்பற்றிய குழுவில் ஒருவனாக இருந்தான் முரளி.

நித்தமும் வெடியோசை கேட்கும் அந்தக் காலத்தில் இவன் சங்கானைப் பிரதேசப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டான் ''தம்பி எங்களுக்கு நாடு வேணும்தான் அதுக்காக உந்த அநியாயப்படுவாரோட மோத முடியுமே தம்பி அவங்கள் எந்தளவு பெரிய வல்லரசு'' என்று கேள்வி கேட்ட பெரியவர்களையெல்லாம் ''ஐயா நாங்கள் இந்தியாவுக்குள்ள நிண்டு தனிநாடு கேக்கயில்ல. எங்கட நாட்டிலதான் நிண்டு போராடுகிறம். எங்களை அழிக்க இண்டைக்கு இந்தியாவில இருந்து படை வந்ததைப் போல நாளைக்கு வேற எந்த வல்லரசின்ர படை வந்தாலும் மோத வேணுமெண்டால் நாங்கள் மோதுவம் தான். நீங்கள் மட்டும் இவ்வளவு காலமும் தந்த ஆதரவை உங்கடை பிள்ளைகளுக்குத்தந்திடுங்கோ'' என்று உறுதியாகவும் தெளிவாகவும் பதிலளிப்பான்.


'எங்கயாவது இவன் உயிரோட இருந்தாச் சரி பாதுகாப்பா எங்கயாவது அனுப்புவம்' என்ற எண்ணத்துடன் ''நீ வா வீட்டுக்கு'' என அழைத்த தாயை நோக்கி ''அம்மா நான் வருவன். இண்டைக்கில்ல. இன்னொருநாள் அந்த நாள் வரும்; காத்திரம்மா'' என்று பதிலளித்தான். அவன் வார்த்தைகளுக்கு அர்த்தம்புரியவில்லை. காத்திருந்தாள் அத்தாய் ஆனால் உயிர் பிரிந்த பின்னர் கூட அந்தச் சந்திப்பு நிகழவில்லை. தமிழீழமெங்கும் வியாபித்திருந்த 'நேசக் கரங்களுக்கு' இவன் உடலை ஒப்படைக்கமனம் வரவில்லை.

26-01-88 அன்று மத்தியானம் இவன் இன்னும் இரு போராளிகளுடன் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். பாண்தான் அன்று கிடைத்தது. அதை முண்டிவிழுங்கிக் கொண்டிருக்கையில் தேசத்துரோகிகள் எங்கும் இருக்கின்றார்கள் என்பதை அவனுக்கு உணர்த்தும் சம்பவம் நிகழ்ந்தது. இந்திய இராணுவத்தினர் சுற்றிவளைத்தனர். தப்பியோடினான்-ஒரு மதிலுக்கு மேலால் பாயும் போது ஒரு ரவை இவனுடலைக் கிழித்துக்கொண்டு சென்றது. இவன் வாய் சயனைட்டைச் சுவைத்தது

கண் விழித்துப்பார்த்தான், எங்கும் இந்திய இராணுவ மணம். அவனுக்கு குளுக்கோஸ் ஏற்றப்பட்டுக்கொண்டிருந்தது. ''நான் எங்கையிருக்கிறன்?'' சூழ இருந்தவர்களிடம் கேட்கிறான். 'வட்டுக்கோட்டை முகாம் ஆஸ்பத்திரியில்'' என்று பதில்கிடைக்கிறது. வாயால் அவன் உண்டதும் நஞ்சைத்தான். ஆனால் அதனை இவன் நேசித்தான். ஆனால் குளுக்கோஸ் என்ற பெயரில் தன்னுடலில் பாயும் இது தனது இனத்துக்கே நஞ்சுவைக்கும். சித்திரவதைகள் தன் இனத்தவரைக் காட்டிக் கொடுக்கலாம். எனவே இது வேண்டாம். வேண்டவே வேண்டாம் - எல்லாக் குழாய்களையும் பிய்த்தெறிந்தான். இந்திய இராணுவத்தினர் ஓடி வருகின்றனர். அவர்களது கட்டளைக்கு கீழ்ப்படியும் விதி அவனுக்கிருக்கவில்லை. அன்று அந்த முகாமில் கைதியாக இருந்தவர்கள் மட்டும்தான் இவனது சடலத்தைப் பார்த்தனர்.

''தம்பி இந்தியன் நிக்கிறான்-இந்தப்பாதையால போ தம்பி - தெரிஞ்சு கொண்டும் ஏன் இதுக்குள்ள வந்தனீ - கவனமாப் போ - எத்தின பேருக்குகெண்டு சொல்லு - உங்களுக்கில்லாத சாப்பாடு எங்களுக்கென்னத்துக்கு - இப்படியெல்லாம் அன்போடு அரவணைத்தகுரல்கள் அவனைத் தேடுகின்றன.

அவன் மீண்டும் வேற்றுருவில் வேற்றுயிரில் தன்னால் நேசிக்கப்பட்ட மக்கள் மத்தியில் மீண்டும் அதே தாகத்துடன்...



சங்கானையில் முரளியினால் தகர்க்கப்பட்ட இந்திய இராணுவத்தினருக்குச் சொந்தமான சோவியத்தயாரிப்பான T52 டாங்கி

---

# பிரபஞ்சமும் அதன் அமைப்பும்

பிரபஞ்சம் பற்றிய அறிவு எம்மவர் மத்தியில் மிக அருமையாகவே உள்ளது. ஆனால் கிறிஸ்துவிற்கு முந்பட்ட காலத்திலிருந்தே கிரேக்கம், இந்தியா போன்ற நாடுகளில் பிரபஞ்சம் பற்றிய ஆய்வுகள் இடம்பெற்றுள்ளன. அவ்வாறு வெற்றுக்கண்களாலும், கணித முறை அறிவினாலும் அவ்வாராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்த முடிவுகள் இன்றைய விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களுடன் பெருமளவு ஒத்துள்ளன. அந்த வகையில் பிரபஞ்சம் பற்றிய பழைய புதிய கண்டுபிடிப்புக்களை ஒரு சிறிய அளவிலாவது அறிந்திருப்பது அவசியம்!

ஆரம்பத்தில் மனிதன் பூமியை ஒரு புதிராகவே பார்த்தான். அது தட்டையானதாகவும் இருக்கக்கூடும் என்று நம்பினான். அப்படி என்றால் வானம் எப்படி தட்டையான பூமியை ஒரு கூரை போல மூடிக் கவியும். இன்னுமொரு புதிர்தான் வானம். யாரோ ற்பனை கூடிய பேர்வழிகள் அதில் நட்சத்திரங்களைப் பொறித்திருக்கிறார்கள்.

கிரேக்கர்கள் பிரபஞ்சம் பற்றி வித்தியாசமாகச் சிந்தித்தார்கள். இ. மு. 500 இல் ஹெக்காடியஸ் பூமி ஒரு மாதிரியான வட்டம் என்றார். அது இரண்டு கோடி சதுர மைல் பரப்புடையது என்றும் வரையறுத்தார். கி மு. 550 இல் இன்னோர் கிரேக்கரான அனாக்கிளிமொண்டர் ''பூமி ஒரு மாதிரியான சிலிண்டர்'' என்றார். ஆனால் கிரகணத்தின்போது சந்திரனின் மேல் விழும் நிழல் வட்டமாக இருந்ததைக் கொண்டு அது பூமியின் நிழலாக இருக்கலாமென்ற சந்தேகம் ஏற்பட்டது. கடற்கரையிலிருந்து விலகிச் செல்லும் கப்பலை அவதானித்தால், முதலில் அடிப்பாகமும் பின்பு மேல் பாகமும் மறைவதைக் காணலாம். இதிலிருந்து ஏதோ ஒரு வளைவில் கப்பல் இறங்கிப் போகிறது என சிந்திக்க வைத்தது.

பூமி உருண்டை என்று முதலில் சொன்னவர் ஃபைலோஸ்தான். இது கி மு. 450 அளவில் நிகழ்ந்தது. இம்முடிவு பல அறிஞர்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. கி. மு. 2 இல் வாழ்ந்த ஏரோட்டோஸ்தனிஸ் எளிய முறையில் பூமியை அளந்தார். ஜூன் மாதம் 21ஆம் திகதி சூரியன் செங்குத்தாக இருக்கும்போது, 500 மைல் தள்ளி அலெக்சாண்டிரியாவில் ஒரு கோலின் நிழல் ஏழு பாகை சாய்வில் விழுகிறது என்று கண்டு பிடித்து அதிலிருந்து கணக்குப்போட்டு பூமியின் சுற்றளவு 25,000 மைல்கள் என்றும் அதன் விட்டம் 8100 மைல்கள் என்றும் சொன்னார். இது மிக ஆச்சரியமானது. இன்றைய கணக்குப்படி பூமத்தியரேகையில் பூமியின் சுற்றளவு 249 2·4 மைல், விட்டம்7917 48மைல்.

கி. மு. 320 - 250 வரை வாழ்ந்த அரிஸ்ரோர்கஸ் முதன் முதலாக சந்திரனின் தூரத்தை அளக்க முயன்றார். கிரகண காலத்தில் அதன்மேல் விழுவது பூமியின் நிழல் எனவும், இதனால் பூமி எந்தளவு பெரிதானது எனவும் அறிய முடிந்தது. இவ்வளவு பெரிய பூமி சிறிய நிழலாக சந்திரனின் மேல் விழவேண்டுமெனில் அது எவ்வளவு தூரத்தில் இருக்கவேண்டும் என்பது பிரதான கேள்வியாக எழுந்தது. கி மு. 190-120 காலப் பகுதியில் வாழ்ந்தவரான ஹிப்பார்கஸ் சிறந்த கிரேக்க வானியலாளராக விளங்கினார். இவர் தனது நுட்பமான கணிப்பின்படி சந்திரனின் தூரம் பூமியின் விட்டத்தைப்போல சுமார் முப்பது மடங்கு இருக்கவேண்டும் என்றார் அதாவது 240,000

(5 ம் பக்கம் பார்க்க)

சிறுகதை

# வெள்ளைக்காரர்கள்

தோட்டத் தொழிலாளர்களைப் பற்றிக் கவனிக்கத்தக்க விதத்தில் கதைகள் எழுதிய இலங்கைத் தமிழ் எழுத்தாளர் மாத்தளை சோமு, இப்போது தான் வாழ்ந்து வரும் ஆஸ்திரேலியாவில் உள்ள தமிழர்கள் பற்றி எழுதியுள்ள கதை இது.

ஏழு மணி தாண்டியும் இரவு நீளுகின்றது. பகல் போல் சூரிய வெளிச்சம். இது 'சம்மர்' காலம். இருட்டு படருவதற்கு எட்டு மணிக்கு மேலும் ஆகலாம். ஆறு மணிக்கே 'கிளினிக்'கை மூடியிருக்க வேண்டும். அடுத்தடுத்து பலர் வந்தாலும் கடைசியாக வந்த லேடி மாக்மில்லன் அவரிடம் நாற்பது நிமிடங்களை லாகவமாக பிடுங்கிக் கொண்டதாலும் இடபோது தான் '*Sorry We are Closed*' என்ற போர்டை மாட்ட முடிந்தது.

லேடி மாக் மில்லன் நுழைந்ததுமே, 'இன்று வழக்கமான நேரத்திற்கு கிளினிக்கை மூட முடியாது' என்பது அவருக்குப் புரிந்தது. சௌக்கியம் சம்பந்தமாக அவள் எழுப்பும சந்தேகங்களைத் தீர்க்க, அவர் தனியாக ஒரு படிப்புப்படிக்க வேண்டும். ஆனாலும் என்ன செய்வது? இந்த லேடியை இன்று, நேற்றா தெரியும்? ஒரு மாமாங்கமாக அவள் அவருடைய வாடிக்கையான பேஷண்ட்...

முதன் முதலில் இந்த நாட்டிலே 'கிளினிக்'கைத் திறந்த போது, எந்த வெள்ளைக்காரரும் அதனை எட்டிப்பார்க்கவே இல்லை. தினமும் 'கிளினிக்'கைத் திறந்து, ஓட்டுவதற்கு ஈக்கள் கூட இல்லாததனால் காற்றை ஓட்டிக்கொண்டிருந்த பொழுதுதான், இந்த லேடி மாக்மில்லன் துணிந்து அவருடைய வைத்திய உதவி நாடி இங்கு வந்தாள். அவர் கொடுத்த முதல் 'பிரிஸ்கிரிப்ஷனே' (மருந்துச் சீட்டு) அவளைச் சுகப்படுததி மயக்கியது. அவளுடைய செல்வாக்குப் பரவிய இடங்களில்எல்லாம் டாக்டர் 'சரம்யோ'வின் பெயர் பிரஸ்தாபமாயிற்று. அதுவே அவருடைய வாழ்க்கைக்கு ராஜபாட்டை அமைத்தது. இன்று சிட்னியில் அவருக்கு மூன்றுகிளினிக். ஒன்று 'நோர்த் ஷோர்' பகுதியில் அவருடைய உபயோகத்திற்கு ஒரு கெடிலாக் - ஒரு ஜக்குவார். மனைவியின் உபயோகத்திற்கு தனியே ஒரு நிஸான் பின் ரா.ரா.. என பல கார்கள். சிட்னியின் ஹை சொசைட்டி வாழும் பகுதியில் பல மில்லியன் டொலர் பெறுமதியுள்ள நீச்சல் தடாகத்துடன் கூடிய 'எக்ஸ்குளூஸிவ்' ஹவுஸ்; (தனிப்பட்ட வீடு) வளம் பெருகியது போலவே அவர் லேடி மாக் மில்லனிலே பாராட்டிய கௌரவமும் உயர்ந்தது.

வீட்டுக்குப் புறப்படுவதற்கு முன்னர், அந்தக் கடிதத்தை அவர் இரண்டாம் தடவையாக வாசித்தார். அம்மா எழுதிய கடிதம... பத்து நாட்களுக்கு ஒரு தரமாவது ஓமந்தூரிலிருந்து கடிதம் அனுப்புவது அவள் வழக்கம். மூன்று கடிதங்களுக்கு ஒன்று என்கிற விகிதத்தில் இவர் பதில் எழுதுவார். பதில் எழுதவேண்டிய காலம் அவரை நெருக்கியது. இதனாலும் இரண்டாம் தடவையாக வாசித்தார். நீல நிற மையில் குண்டு குண்டாக எழுத்துக்கள்.. கை நடுக்கம் அந்த எழுத்துகளிலே கசியவல்லை... ஓ...! பத்து நாட்களுக்குப் பிறகு அவர் தமிழ் எழுத்துக்களைப்பார்க்கிறார். அம்மா மட்டும் இல்லாவிட்டால், அவர் தமிழ் எழுத்துக்களை மறந்திருக்கக் கூடும்.

நாள் முழுவதும் உதட்டு நுனியிலே ஆங்கிலத்தை உருட்டும் பேஷண்டுகள்... தொலைபேசி உரையாடல் ஆங்கிலத்தில் ஆங்கிலப்பத்திரிகைகள்; டி.வி சானல்கள் 'டடி' என்றழைக்கும் மகன் 'டார்லிங்' என்று கெஞ்சுகிற மனைவி. கனவு காண்பதற்குக் கூட தமிழின் உதவி தேவையில்லை ...

கடித மேய்ச்சலிலே அசை போடும் அவர் மனத்திலே ஒரு நினைவுப்பொறி....

'என்னடா தூங்கிற! டியுஷனுக்குப் போகலியா?'

இன்னைக்கி சண்டே! இன்னைக்குமா போவணும்?'

'படிக்கிறவனுக்கு என்னடா சண்டே - மண்டே சுடச்சுட இட்லி போட்டு வைச்சிருக்கேன். சாப்பிட்டு ஓடு! படிச்சி நாளைக்கி நல்ல வேலைக்குப் போனா எனக்கா சம்பளத்தை கொடுக்கப்போற?'

அரைகுறை மனதோடு படுக்கையை விட்டு எழுந்து டியுஷனுக்குத் தயாரானான். இட்லியை உள்ளே தள்ளிடவுன் பஸ்ஸைப் பிடிக்க ஓடி. பஸ்ஸின் நெரிசலிலே சராசரி இந்தியனாகச் சங்கமித்தான்...

அம்மாவின் கரிசனையான தூண்டுதலினால். படித்து டாக்டராகி பட்ட மேற்படிப்பாக ஆய்வுகள் மேற்கொண்டு மேலும் சில பட்டங்களை இணைத்த பின்னர் ஆஸ்திரேலியாவில் குடியேறினார். 'லல்லி' யாகி விட்ட லலிதாவை மணந்து அவளுடைய 'மைகிரேஷனை' ஊக்குவித்தது.

அம்மாவின் கடிதம் உறவினர் - ஊர்க்காரர் சுகநாமாவளியை முடித்து, ஊர்ச்சமாச்சாரங்களுக்குத் தாவுகின்றது. ஓமந்தூர் காமாட்சியம்மன் கோயில் திருவிழா சிறப்பாக நடந்தது. திருப்தி .. பக்கத்து வீட்டு அன்னபூரணி பிள்ளைகள் சண்டை போட்டுப் பங்கு பிரித்துக் கொண்டார்கள். பரிதாபம்.. செல்லையாவின் மாடு கன்று போட்டது. அழகான நாகு! வெள்ளைச்சாமியின் ஆடு காணாமல் போய்விட்டது. ஊரில் ஆடு திருட்டு அதிகம்..பெரியசாமிப்பிள்ளையின் நாலாவது மகள் பெரிய மனுஷியாகிவிட்டாள்.பாவம்! வையாபுரியின் மகளுக்கு சிங்கப்பூர் மாப்பிள்ளை கிடைத்துள்ளது. மாப்பிள்ளையின் வேலையைப் பற்றி ஒரே கசமுசா' டவுன் பஸ்சார்ஜ் கூடிவிட்டது. திருச்சி ஜங்ஷனுக்கு ஒண்ணரை ரூபா...

கடிதம் மீண்டும் குடும்ப சேதிக்கு வருகிறது... ராஜா எப்படி இருக்கிறான்? ஒரு முறை அவனைக் கூட்டிக் கொண்டு வா! கண்ணை மூடி விடுவதற்குள் அவனுடைய மழலையைக் கேட்க ஆசை! ..

ராஜாவுக்கு இப்போ வயது எட்டு.. அவன் ஒரு வயதாக இருந்த போது குலதெய்வத்திற்குப் பொறந்த முடி எடுக்கப்போய் வந்ததோடு சரி.பின்னர் ஒரு முறை ஜப்பானுக்கும், இன்னொரு தடவை மலேசியாவுக்கும் குடும்பத்துடன் போயிருக்கிறான்.அவன் உதடுகளில் ஆங்கிலம் மட்டுமே நடமாடுகிறது. இப்போது அவர் தன் மனைவியுடன் தமிழ்பேசினால் அவன் விழிக்கிறான்?

'வாட் ஆர் யூ டாக்கிங் டாடி?' (நீங்கள் என்ன பேசுகிறீர்கள் அப்பா?)

'வீ ஆர் டாக்கிங் டமில். இட் இஸ் அவர் மதஸ் டங் ..' (நாங்கள் பேசுவது தமிழ்.இது எங்களது தாய்மொழி)

'இட் சவுண்ட்ஸ் ஏ சில்லி லாங்குவேஜ் ...' (இந்தமொழியின் உச்சரிப்பு கூடாதது) என்று சொல்லி அவன் சிரிப்பான். ஆங்கிலம் அவனுக்கு தாய்மொழி ஆகிவிட்டது அவன் பாட்டியுடன் எப்படி பேசுவான்?...

'கெடிலாக்' நகர அதன் ஸ்டீரியோவில்எஸ். டி. நேரில் நின்று பாடுவதைப் போல் பாடிக் கொண்டிருந்தார் கிராமத்தில் சினிமா பார்த்தது அவர் நினைவில் வலம் வந்தது 'அடுத்த வீட்டு ராமலிங்கத்துடன் பத்து கிலோ மீட்டருக்கு அப்பாலிருக்கும் கொட்டகையில் சினிமா பார்ப்பதற்காக வாடகை சைக்கிள்களில் உயிர் போக மிதித்துக்கொண்டு...'

அது ஒரு காலம் ..

வீட்டு கரேஜில் காரை நிறுத்திய போது ராஜா எட்டிப் பார்த்தான். உள்ளே ஆங்கில நாவலொன்றை மேய்ந்து கொண்டிருந்த அம்மாவுக்கு, 'மம்மி! டாடி ஹாஸ்கம்' (அம்மா! அப்பா வருகின்றார்) என்று குதூகலத்துடன் குரல் கொடுத்தான் ..

அவர் உள்ளே நுழைந்து காலாற வில்லை... டெலிபோன் கிணு கிணுத்தது:

'ஹலோ சாம்யோ ஹியர்!' (இங்கே சாம்யோபேசுகிறேன்)

இங்கு அவர் குடியேறிய நாட்களில் 'கிறிஸ்ரியன்'நேம் சக சேர் நேம் சாமிநாத பிள்ளை யோகேஸ்வரன்' என்று சொன்னபோதெல்லாம், 'ஓ! யூ ஹவ் எ லோங் நேம்' (பெரிய பெயராக உள்ளது) என்கிற சலிப்புகள் அவரைப்பல பக்கங்களிலும் தாக்கின. வெள்ளைக்காரர்களுடைய பற்களுக்கிடையிலும். நாக்குகளுக்கிடையிலும் அவர் பெயர் படாத பாடு பட்டது. ஒரு சமயம் *Sam Natha Pillai Yogeswaran*' என்று எழுதிப் பார்த்த போது சடுதியாக ஒரு பொறி '*Sam Yo*- சாம் யோ' என்று சுருக்கமாக அமைவதை அவதானித்தார். அன்றிலிருந்து தமது பெயரை 'சாம் யோ' எனச் சுருக்கிக் கொண்டார். இன்று அவருடைய பூர்வீக பெயர் மறைந்து சாம் யோ'என்கிற பெயர் இயல்பாகி விட்டது.

'வாசு பேசுகிறேன் ..'

'ஓ! ஹவ் ஆர் யூ? ''(எப்படி? நல்லா இருக்கிறீர்களா?)

'நலம்.நான்சொன்ன தமிழ் வகுப்புக்கள் பற்றி ''

''அதுவா? இஃப்த சில்ரன் ஆர்இன்ட் ரஸ்டட்வீகேகெல்ப் தெம் (பிள்ளைகள் விரும்பும் பட்சத்தில் தான் இதில் நாங்கள் உதவலாம்) இல்லையா?

''அவர்கள் அக்கறை காட்ட நாம்தான் தூண்டவேண்டும். நமது பிள்ளைகள் தமிழைப் புறக்கணிப்பதற்கு நாங்கள் மறைமுகமாக ஆதரவு தந்தால் அவர்கள் காலப்போக்கில் தங்கள் பெற்றோர்களை மறப்பதற்கு சந்தர்ப்பம் கொடுக்கின்றோம். தமிழை மறந்து ஆங்கிலப்புலமை பெறுவதனால் மட்டும் நமது பிள்ளைகள் வெள்ளைக்காரர்களாகி விடுவார்களா? அவர்கள் சுயத்தையும் அதனுடன் சேர்ந்த கௌரவத்தையும் இழந்து விடுவார்கள்... காலம் கடப்பதற்கு முன்னர் நாங்கள் சிந்தித்து செயலாற்றவேண்டும்'' என்று வாசுதேவன் தொலைபேசியில் குட்டி லெக்சர் அடித்தார்.

வாசுதேவன் சிட்னியிலே பெரும் புள்ளி. இங்கிலாந்தில் இன்ஜினியரிங் பட்டம் பெற்றாலும், பின்னர் ஏதோ நினைப்பில் அக்கவுண்டன்சியிலும் பட்டம் பெற்றவர். பிரிட்டிஷ் பிரஜையாகி அங்கு பெரிய தொழில் ஒன்றை வளர்த்தார். வெள்ளைக்கார பங்காளிகளுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளினால் பிரிந்து எழுபதுகளின் ஆரம்பத்திலேயே ஆஸ்திரேலியாவில் 'பிசினஸ் மைக்ரேஷனில்' குடியேறினார். பணக்காரர் என்பதற்காகவும் மூத்த குடியினர் என்பதற்காகவும் அவருக்கு ஒரு மதிப்பு உண்டு. முகத்தில் அடித்தது போல் பதில் சொல்ல டாக்டருக்கு பனசு வரவில்லை.

கொஞ்சம் டைம் தாங்க! நானே உங்களுக்கு ஒரு போன் கோல் தாரேன்!''

''நன்றி. யார் ஒத்துழைக்கா விட்டாலும் என் பணி தொடரும். ''

''வணக்கம் ''

' பை ..''

டாக்டர் குளித்து உடை மாற்றி ரிலாக்ஸாக கையில் ஒரு டிரிங்குடன் எண்டடெயன் மென்ட்' அறைக்குள் வந்தார். அவர் வருகைக்காக மனைவி சோபாவில் காத்திருந்தாள்.

மகன் ராஜாவிற்கு தனி அறை .. ஆஸ்திரேலியாவில் வெள்ளைக்காரச் சிறுவர்களைப்போல் அவன் தன் அறையையே மாற்றி விட்டான்.

''ராஜா வீ ஆர் கோயிங் டு வாட்ச் வீடியோ டு யூ லைக்கு ஜாய்ன் அஸ் ''(ராஜா நாங்கள் வீடியோப்படம் பார்க்கப் போகிறோம். நீ விரும்பினால் எங்களுடன் வந்து பார்) என்று குரல் கொடுத்தார்.

அவன் தாய்க்குப் பக்கத்தில் வந்தமர்ந்தான்.

துவரம் பருப்பும், உளுத்தம் பருப்பும்,சாம்பார் பொடியும், பெருங்காயமும் வாங்குகின்ற 'இந்தியன் ஸ்பைஸ் சென்டரில்' எடுத்து வந்த 'கரகாட்டக்காரன்' பட கேசட்டை 'வீடியோ'வில் போட்டார். படம் ஓடியது அவருடைய மனம் மீண்டும் பழைய நினைவுகளிலே மிதந்தது.

',டாடி ஐ டோன்ட் அன்டர்ஸ்டான்ட் பிளிஸ் எக்ஸ்க்கியூஸ் மீ'' (அப்பா. என்னால் விளங்கிக்கொள்ள முடியவில்லை. மன்னித்துக்கொள்ளவும்)என்று கூறி எழுந்த ராஜா தன் அறைக்குப் போனான். அங்குள்ள டி.வி.யைப் போட்டான் அவனுக்குப்பிடித்தமான 'ஹொலிவூட்மூவி' சானல்பத்திலே ஓடிக்கொண்டிருந்தது.

ஞாயிறு ஓய்வினைப் பூரணமாக அனுபவிக்கும் நாள்...

'சம்மர்' வெயிலின் உக்கிரம் வேறு. இந்த வெயிலிலே எருமைகளைப்போல் தண்ணீரிலே மூழ்கிக் கிடப்பதிலுள்ள சுகமேதனி அந்தச் சுகத்தினை சாம்யோ தாராளமாக அனுபவிக்கின்றார். வீட்டின் பின்பக்கம் இருந்த நீச்சல் தடாகத்தில் கழுத்தளவு தண்ணீரிலே நேர ஓட்டத்தைப் பற்றிய பிரக்ஞையின்றி விழுந்து கிடந்தார். அவரோடு 'லல்லி'யும் நீந்தினாள். தலை முடியும் கண்களின் நிறமும் மாறியிருந்தால் அவள் அசல் வெள்ளைக்காரிதான். ராஜா ஏ. ஸி. யை முடுக்கிவிட்டுடி.வியில் லைஃப் ஆக ஒளிபரப்பிக் கொண்டிருந்த கிரிக்கெட் மாட்ச்சை ரசித்துக்கொண்டிருந்தான்.

ஜலக்கிரீடையின்கொள்ளை சுகத்தை அனுபவித்தவாறே ''லல்லி!நம்ம ராஜா தமிழ் கத்துக்கிறதைப்பற்றி வாட் இஸ் யுவர் ஒப்பீனியன்?''(உமது அபிப்பிராயம் என்ன) என்று

(6ஆம் பக்கம் பார்க்க)

## மாவீரர்கள்....!

இவர்கள்:
வைராக்கிய விருட்சத்தின்
விழுதுகள்!
ஏகாதிபத்தியத்தை ஏப்பம் விட்ட
அக்கினிக் குஞ்சுகள்!

குறைப் பிரசவங்களுக்கும்
கருச்சிதைவுகளுக்கும் மத்தியில்
பூரணமானவர்கள் !
சூறாவளியாலும், புயற்காற்றினாலும்
அசைக்க முடியாது போன
ஆலமரங்கள் !
இரத்தக் கடலிலே
நீச்சலடித்தவர்கள் !
இரையாக்க நினைத்துத்
தூண்டில் போட்டவர்களை
தூண்டிலோடு இழுத்தவர்கள் !
உயிர் வாயுவை சுமந்து
சுழியோடியவர்கள்
எலும்புகளும் மண்டையோடுகளும்
இடறும் போது.
இதயத்தை இரும்பாக்கிக் கொண்டு
துப்பாக்கித் தடுப்பால் கரைதேடியவர்கள்
உறுதிக்கு உவமானமாகும்
உண்மையின் உடன்பிறப்புக்கள் !
எம் விடுதலைத் தீயை
உலகெங்கும் கொழுந்துவிட்டெரியச் செய்யும்
கொள்கையின் தீப்பிழம்புகள் !
உறங்கிக் கிடந்தவர்களைத்
தட்டியெழுப்பிய உதய சூரியன்கள் !
போராளிகளைப் படைத்துக் கொண்டிருக்கும்
புதிய சிருஷ்டி கர்த்தாக்கள் !
எதிரியை நோக்கி எடுத்துவைக்கும்
ஒவ்வோர் அடியையும் துரிதப்படுத்தி
முன்னேற வைக்கும் வீரத்திற்கு
விரிவுரை நிகழ்த்திடும் விரிவுரையாளர்கள் !
தமிழீழத்தில் புலரும் பொழுதுக்கு
ஒளி கொடுக்கப் போகும்
சூரியக் கதிர்கள் !
இவர்கள் இல்லாமல் போனவர்கள் அல்ல
எம்முள் எல்லாமாய் இருப்பவர்கள்.

நன்றி: 'வானதியின் கவிதைகள்'

# தமிழீழ மண்ணும் இந்திய எஜமானிய கலாசாரமும்

**- சாரணன் -**

''வடக்கும் கிழக்கும் நிரந்தரமாக இணைக்கப்படவேண்டும்''

-இந்திய வெளியுறவுச் செயலாளர் டிக்ஷிட்.

''இலங்கை-இந்திய ஒப்பந்தம் ஒரு ஞானச்சிந்தனை''

-இலங்கைக்கான இந்தியத் தூதர் ஜா.

எப்படி ஓர் ஒப்பந்தம் செய்யப்படக்கூடாது என்பதற்கு சிறந்த முன்னுதாரணம் இலங்கை-இந்திய ஒப்பந்தம்''

-முன்னாள் இந்திய வெளியுறவுச் செயலாளர் வெங்கடேஸ்வரன்.

இலங்கை விவகாரம் வெறுமனே இராணுவத் தன்மை வாய்ந்ததல்ல; அது அரசியல் இராணுவத்தன்மைவாய்ந்தது

-முன்னாள் இந்தியக் கூட்டுப் படைத் தளபதி சுந்தர்ஜி.

48 மணித்தியாலத்துக்குள் புலிகளிடமிருந்து ஆயுதங்களைப் பறித்துவிட முடியும் என்று உறுதி கூறிய 'சிந்திக்கும்'' தளபதி சுந்தர்ஜி ஏறக்குறைய ஓராண்டின் பின்பு தனது தோல்வியை ஒப்புக்கொள்ளும் பாங்கில் இலங்கை விவகாரம் வெறுமனே இராணுவவிவகாரமல்ல என ஞான உதயத்துடன் கூறினார் இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் பிரதான சூத்திரதாரியாகிய டிக்ஷிட் இல்லாது அவ்வொப்பந்த எல்லையையும் கடந்து வடக்கு-கிழக்கு இணைக்கப்பட வேண்டும் எனக் கூறியுள்ளமை ஒப்பந்தத்தில் அவர் விட்ட தவறை ஒப்புக்கொள்ளும் செயலே தவிர வேறில்லை. உண்மையில் இவ்வொப்பந்தத்தில் ஒரு சிறுதவறுதான் நிகழ்ந்துவிட்டது என்றில்லை. மாறாக வெங்கடேஸ்வரன் கூறியது போல ஒப்பந்தம் ஒரு பிழையானமுன்னுதாரணமே.

அப்படியாயின் செத்துப்பிறந்த குழந்தையாகிய ஒப்பந்தத்தை ஒரு ஞானக்குழந்தை என ஜா ஏன் தான் கூறவேண்டும்?

ஒப்பந்தம் செத்துவிட்டது அல்லது காலாவதியாகி விட்டதுஎன்றுகூறினால் இலங்கை விவகாரத்தில் இந்தியாவிற்கு ''சட்டபூர்வமான'' ஒரு பிடியும் இல்லாது போய் விடும். எவ்வாறாயினும் இந்தியர்களுக்குத் தாம் இலங்கை விடயத்தில் பிழை விட்டுவிட்டோம் என்ற உணர்வு இப்போது ஏற்பட்டுள்ளது. அவ்வாறு அந்தப் பிழையை இது உணர்த்தியதால்தான் என்னவோ இவ்வொப்பந்தத்தை ஞானச் சிந்தனை என உரைத்தாரோ?

ஒன்று மட்டும் உண்மை. அவர்கள் முன்பு விட்ட பிழையை, அவர்கள் இப்போது உணர்ந்தது மட்டுமல்ல எதிர்காலத்திலும் அவர்கள் பிழை விட்டோம் என உணராது விட வேண்டுமாயின் ஈழத்தமிழரின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க வேண்டும்என்பதுதான்.

இந்திய இராஜதந்திரிகள் தமது கடந்தகால பிழைகளை உணர்ந்துள்ள போதிலும் அவர்களது தற்போதைய சிந்தனையும், எதிர்காலம் பற்றிய கண்ணோட்டமும் பிழையான அடித்தளத்தை சொண்டவை என்பதிற் சந்தேகமில்லை.

ஈழத்தமிழர் சம்பந்தமாக இந்தியர்களிடம் பல பிழையான கண்ணோட்டங்கள் உள்ளன. இந்தியர்களிடம் ஓர் எஜமானிய மனோபாவம் உண்டு. அந்த எஜமானிய மனோபாவத்துடன் ஈழத்தமிழரை அணுகினர்.

ஈழத்தமிழர் விவகாரத்தைக் கையாளத் தொடங்கியகாலத்திலிருந்தே ஈழத்தமிழ்த் தலைவர்களையும் தமிழர்களையும் எஜமானிய மனோபாவத்துடனேயே இந்தியர் நடாத்தினர்.

ரொமேஷ்பண்டாரி டிக்ஷிட் ராஜீவ், இராணுவ உயர் அதிகாரிகள் அனைவரினதும்சாதாரணமான செயல்கள் எல்லாம் அவர்களது எஜமானிய மனோபாவத்தை வெளிக்காட்டியது. ரொமேஷ்பண்டாரியை பார்த்துசத்தியேந்திரா அதிகெளரவத்திற்குரிய ரொமேஷ் பண்டாரி அவர்களே என அழைக்காது திரு.பண்டாரி(Mr பண்டாரி)என அழைத்தமைக்காக ரொமேஷ்பண்டாரி அதனை அ.அமிர்தலிங்கத்திடம் குறை கூறியதாகவும்,சத்தியேந்திராவை அதற்காக அமிர் கண்டித்ததாகவும் அதே வேளை தான் அதிகெளரவத்திற்குரிய பண்டாரி அவர்களே என அழைக்கும் போது நீ ஏன் திரு (Mr) பண்டாரிஎனஅழைக்கின்றாய் என்று சத்தியேந்திராவை அமிர் வினவியதாகவும் செய்தி. எது எப்படியோ தன்னை எஜமானாக சத்தியேந்திரா கணிக்கவில்லை என்பதற்காக ரொமேஷ் பண்டாரி அவர்மீது ஆத்திரம் அடைந்தார் என்பதுமட்டும் உண்மை.

இந்த எஜமானியத் திமிர் இலங்கை - இந்திய ஒப்பந்தத்திலும், விடுதலைப் புலிகளுக்கு எதிராக அவர்கள் நடந்து கொண்டதிலும் அப்படியே தொனித்தது. ஒவ்வொரு தமிழ் மகனையும் அந்த மனோபாவத்துடன் தான் ஒரு சாதாரண இந்திய சிப்பாய் கூட அணுகினான்.

இந்த எஜமானிய மனோபாவம் புலிகளைச் சீற்றம் கொள்ளச் செய்தது. இந்த அர்த்தத்தில் இந்தியக் கலாசாரம் முதல் முறையாக கேள்விக்கும் தாக்கத்திற்கும் உள்ளாகியது என்றே கூறலாம்.

எஜமானிய மனோபாவம் இந்திய கலாசாரத்தின் ஒரு பிரதான அங்கமாகும். இந்தியப் பிராமணியர்கள் இந்த எஜமானிய மனோபாவத்தைச் சிந்தனையாக வளர்த்தெடுத்தனர் பிராமணர். இந்தப் பிராமணிய எஜமானிய மனோபாவம் பரந்த மக்கள் மத்தியிலான ஒரு பண்பாக வளர்த்தெடுக்கப்பட்டுள்ளது இந்தியப் பிராமணர்கள் இந்திய மக்களையே தமது அடிமைகளாகவே இன்னும் உணர்கின்றனர். அப்படியே தம்மை எஜமானர்களாக எண்ணி நடாத்துகின்றனர். கோலோச்சும் இந்தப் பண்பானது பிராமணர் அல்லாதவர்களிடமும் பரவியது.

மொத்தத்தில் எஜமானிய மனோபாவம் இந்திய கலாசாரத்தில் ஓர் அங்கமாக விரவிக் காணப்படுகின்றது. அந்த எஜமானிய மனோபாவத்துடன் ஈழத் தமிழரையும் இந்தியர் அணுகினர். அந்த வகையில் உழுத்துப்போய் உள்ள இந்திய கலாசார அங்கம் ஒன்று முதல் முறையாக தமிழீழ மண்ணிலே தாக்கப்பட்டது என்பதையும், அந்த வகையில் இந்திய கலாசாரமும் ஈழ மண்ணில் தோல்வி கண்டது என்பதையும் இந்திய கொள்கை பகுப்பாளர் உணரவார்களே ஆயின் இனிமேலும் தமிழர் மீது எஜமானிய மனப்பாங்குடன் நடக்கலாம் என்பதைக் கைவிடுவதுடன் தமது இந்திய மக்கள் மத்தியிலும் தாம் எஜமானிய மனப்பாங்குடன் நடக்காது விடுவதற்குத் தமிழீழ மண்ணில் ஏற்பட்ட அனுபவத்தை முக்கிய படிப்பினையாகக் கொள்வார்களாக.

இந்த வகையில் உழுத்துப் போயுள்ள இந்திய கலாசார அங்கம் ஒன்றிற்கு ஈழ மண் ஒரு புரட்சிகரமான தாக்கத்தைக் கொடுத்தது என்பதை இந்தியச் சமூக அரசியற் புரட்சியாளர்களும் உணர்வார்களாக.

## அண்ட வெளியில் உலோகப் பொருள்கள்

அண்ட வெளியில் 2 இலட்சத்து 75ஆயிரம் கிலோ குப்பை கூழங்கள் காணப்படுகின்றன. விண்வெளிப் பயணங்களின் போது விண்வெளிக் கலங்களிலிருந்து ஆங்காங்கே சிதறும் உலோகப் பொருள்களே இவ்வாறுகாணப்படுகின்றன.இவைதுப்பாக்கிக் குண்டின் வேகத்தைப்போல் 5 மடங்கு வேகத்தில் இயங்கிக் கொண்டு இருக்கின்றன.

விண்வெளிக் கலங்களில் இவை மோதினால் பெரும்பாதிப்புகளை ஏற்படுத்தும். எனவே இவற்றை ''பெருக்கித்தள்ள'' பயிற்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.1993 ஆம் ஆண்டில் இதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்

## பிரபஞ்சமும் அதன் அமைப்பும்

மைல் இருக்கலாம் என்றார். ஆனால் நவீன கணிப்பின்படி 238 854·71 மைல் என அறியப்பட்டுள்ளது. இந்த தூர இடைவெளியை அறிந்த கிரேக்கர்கள் சந்திரனின் விட்டம் சுமார் 2 160 மைல் என கணிப்பிட்டனர், இதன்மூலம் பூமியை விட அது சிறியது என்ற முடிவு ஏற்பட்டது.

அரிஸ்டோக்கஸ் சூரியனைப் பற்றி ஆராய்ந்தபோது, சந்திரன் முதல் கால்பாகத்தில் இருக்கும்போது பூமி, சூரியன் சந்திரன்ஆகியமூன்றும்ஒருநேர்கோண முக்கோணமாக இருக்கிறது என்றும், சந்திரனின் தூரம் தெரியுமென்பதால் ஒரே ஒரு சின்னக்கோணம் மட்டும் கண்டுபிடித்தால் சூரியனின் தூரத்தைக் கண்டுபிடித்து விடலாம் என திரிகோண கணித முறை மூலம் கணக்கிட்டு சூரியன் 50 இலட்சம் மைல் என்றார். ஆனால் இது பிழை. அரிஸ்டோக்கஸின் கணிப்பு முறை சரியானதாக இருந்தபோதும் அவர் காலத்தில் கோணங்களை திருத்தமாகக் கண்டுபிடிக்கும் ஆற்றல் இருக்கவில்லை. முக்கியமாக தொலைநோக்கி கண்டுபிடிக்கப்படவில்லை. எனினும் சூரியன் 50 இலட்சம் மைல் தூரத்திலாவது இருக்கலாமென கணிப்பிட்டமையானது மனித அறிவு ஓரளவு விஸ்தாரமடைந்ததையே காட்டுகிறது.

நவீன வானியலின் ஆரம்பத்தில் கோபர் நிக்கஸ் என்ற பேலந்து நாட்டவர் 1543 இல் பதிப்பித்த புத்தகத்தில் (அவர் இறந்த அன்று பிரசுரமாகியது) விண்வெளியின் மையம் பூமியில் சூரியன்தான் என்று எழுதியிருந்தார்கோபர் நிக்கஸ். சூரிய மையத்தை கிரகங்களும் பூமியும் வட்டமாகச் சுற்றுகின்றன என்று முதன்முறையாக மையத்தை பூமியிலிருந்து சூரியனுக்கு மாற்றினார். இந்த வகையில் முன்பு பூமிக்கு தரப்பட்டிருந்த முக்கியத்துவத்தை நீக்கியவர் என்ற வகையில் வானியலில் அவருக்கு நிரந்தர இடமுண்டு.

1609 இல் கெப்ளர் என்ற ஜேர்மனிய வானியலாளர் செவ்வாய்க் கிரகத்தை அவதானித்து, கிரகங்கள் சூரியனைச் சுற்றுவது வட்டவடிவிலல்ல, முட்டை வடிவில் தான் என்று சொன்னார். கெப்ளரின் கிரக சஞ்சார விதிகள் இன்றும் பிரயோசனமானவை. இதன்படி கிரகங்கள் ஒன்றுக்கொன்று எத்தனை மடங்கு தூரத்திலுள்ளன என அறிய முடிந்தது. ஆனால் குறிப்பாக எவ்வளவு தூரம் என்பதை அறியமுடியவில்லை. இத்தூரங்களை அளக்க பராலாக்ஸ் (Parallax) என்ற முறையைப் பயன்படுத்தினார்கள். ஒரு சுவருக்கு முன்னால் நின்ற வண்ணம் ஒரு விரலை செங்குத்தாக நிறுத்தி முதலில் வலது கண்ணாலும், பின் இடது கண்ணாலும் பார்க்கும்போது விரல் இடம் மாறுவது தெரியும். விரலை முகத்துக்குச் சமீபமாகக் கொண்டு வரும் போது இந்த இட வித்தியாசம் அதிகரிக்கிறது. இதைத் தான் பராலாக்ஸ் என்பர். இதற்கான பிரதான காரணம் இரு கண்களும் சில அங்குல இடைவெளியில் இருப்பதர்கும். வலது கண்ணிற்கும் விரலுக்கும் உள்ள கோணம் இடது கண்ணிற்கும் விரலுக்குமுள்ள கோணத்திலிருந்து வித்தியாசப்படுகிறது. விரல் நெருங்கி வர இக்கோணம் விரிகிறது. இந்த எளிய முறையைப் பின்பற்றியே விண்ணிலுள்ள கிரகங்களின் தூரங்களைக் கணிக்க விரும்பினார்கள்.

1608 இல் கலிலியோகலிலி என்ற இத்தாலியரால் தொலைநோக்கி கண்டுபிடிக்கப்பட்டது. இதன் மூலம் கணிப்பீட்டில் சிறிய சிறிய வித்தியாசங்களைக்கூட அவதானிக்க முடிந்தது. இதனால் பராலாக்ஸ் முறைக்கு உயிர் கொடுக்கப்பட்டது. குறிப்பாக 1671 இல் செவ்வாய்க் கிரகத்தின் தூரத்தை இருவர் கண்டுபிடித்தனர், இதன் கோணத்தை இரண்டு பகுதிகளிலிருந்தும் கணிக்கவேண்டியிருந்ததால் ஜான்ரிகர் என்ற பிரஞ்சுக்காரர் கஜானாவிலும், காஹின் என்பவர் பாரிசிலும் இருந்து கொண்டு செவ்வாய்க்கிரகத்தின் கோணத்தை தூர நட்சத்திரத்துடன் ஒப்பு நோக்கிக் கணித்தார்கள். அவர்களது கணிப்பின்படி செவ்வாயின் தூரம் 8,70,00 000 மைல்களாகும் இது சரியான தூரத்திலிருந்து 60,00,000 மைல்களே வித்தியாசப்பட்டிருந்தது.

சமீப காலத்தில் ராடர் முறைகளில் மைக்ரோவேவ்ஸ் அலைகளை அனுப்பி பிரதிபண்ணி இத்தூரங்களைக் கணக்கிட்டுள்ளார்கள். அதன்படி சூரிய குடும்பத்தின் சரியான தூரம்:

### சூரியனில் இருந்து எத்தனை தொலைவு:

| கிரகம் | கோடி கி. மீற்றர் |
|---|---|
| மெக்குரி | 5 79 |
| வீனஸ் | 10.82 |
| பூமி | 14.95 |
| செவ்வாய் | 22.79 |
| ஜுபிடர் | 77.83 |
| சனி | 142.80 |

நட்சத்திரங்கள் பற்றி பராலாக்ஸ் முறை போதாதுள்ளது. ஏனெனில் அவை அதிக தூரத்திலுள்ளன. சென்ற நூற்றாண்டின் பாதியில் சில அருகிலுள்ள நட்சத்திரங்களின் தூரங்களை பராலாக்ஸ் முறையில் அளக்க முடிந்தது. இதன் தூரத்தைக் குறிப்பிட பூச்சியங்கள் போதாதிருந்தன. இதற்குப் பெரிய எண்கள் தேவைப்பட்டன இதனை ஒளிவருசம் அல்லது 'பார்செக்' என்ற அளவுகோல்களினூடாகவே குறிப்பிட முடிந்தது. இதன்படி சுமார் 6 0 நட்சத்திரங்களின் ஒளிவருச தூரங்களைக் கண்டுபிடித்துள்ளார்கள்.

இன்றைய கணக்குப்படி பிரபஞ்சத்தின் மொத்த அளவு 70,00,00000 ஒளி வருசங்கள் எனப்படுகிறது. இப்போது பிரபஞ்சத்தின் படம் ஓரளவு முழுமையாக மனிதனுக்குக் கிடைத்து விட்டது. முதலில் பூமி, பிறகு சூரியன். சூரியக் குடும்பம் அருகிலுள்ள நட்சத்திரங்கள், தொலைவிலுள்ள நட்சத்திரங்கள், எமது பால் வீதி இதுபோன்ற வேறு பால் வீதிகள் ஆண்ட்ரமீடா, மெகலானிக் மேகக்கூட்டம், நெபுலாக்கள், கறுப்புத் துவாரங்கள் என்று பிரிக்கப் பிரிக்க விரிந்து கொண்டே செல்லும் புதிரான மர்மம்.

ஜுனியர் விகடன் கட்டுரை ஒன்றை அடிப்படையாகக் கொண்டு இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

## மனித உழைப்பில் அணைக்கட்டு

பங்களாதேஷின் பென்னிநதி பெருக்கெடுப்பதை தடுப்பதற்கும் ஓர் நீர் தேக்கத்தை ஏற்படுத்தவும் முழுக்க முழுக்க மனித சக்தியை மட்டும் பயன்படுத்தி 1300 மீற்றர் நீளமான அணைக்கட்டொன்று கட்டி முடிக்கப்பட்டுள்ளது 1 00,000 களிமண் நிரப்பப்பட்ட 45 கிலோ சாக்குப் பைகள், 2 50 000 மெற்றிக் தொன் ஆற்றுக்கற்கள் 6,00,000 மணல் மூடைகள் 3,00,000 செங்கற்கள் என்பன இதற்குப் பயன்படுத்தப்பட்டன. இவையனைத்தும் மனிதர்களாலேயே அஞ்சல் முறையில் கொண்டுவரப்பட்டன.

## வெள்ளைக்காரர்கள்

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

கேட்டார்.

''அது உங்க இஷ்டம்-அவன் இஷ்டம். லீவ் மை ஹெட் எலோன்.'' (என்னை இதில் சம்பந்தப்படுத்த வேண்டாம்)

வாசுதேவன் போனில் சொன்னதை ஆங்கிலத்தில் ஒப்புவித்தார்.

''மதுரையிலேதமிழ்ச்சங்கம் தொடங்க வேண்டியவரு வைத ஹெல் டிட் ஹிகம்டு சிட்னி? (ஏன் இங்கு வந்து இந்த நரகத்தை செய்கிறார்) என்று கூறி மோசனச் சிரிப்பு ஒன்றினை உதிர்த்தாள்.

அவள் வெள்ளி ஸ்பூனை வாயில் வைத்துக் கொண்டு பிறந்தவளாக்கும். அவளுடைய படிப்பு கான்வெண்டில் துவங்கியது. ஆங்கிலம் தான் அவளுக்குத் தாய் மொழி போல...

ஒப்பாசாரத்திற்காக கொஞ்சப் தமிழையும் பொறிக்கிக் கொண்டவள். மெட்ராசுக்கு அது தோது.. இங்கு? மற்றைய தமிழ் பெண்கள் மத்தியிலே கொஞ்சம் தமிழ் தெரியும் என்று காட்டிக்கொள்வதிலே கூட அவளுக்கு இஷ்டமில்லை.

பதில் ஏதுப சொல்லாமல் புன்னகையோடு அவளை நெருங்கினார் அவர். விழிகள் இனய சபாசாரப் ஒன்றினைப் பரிமாறின. இனி அவர் கைகள் சும்மா இருக்காது என்பது லல்லிக்குத் தெரியும்.

''டடி! வன் பிளாக் மேன் ஹாஸ் கம் டு சி யூ..''(அப்பா ஒரு கறுப்புமனிதர் உங்களைத் தேடி வந்துள்ளார்) என்று சொன்னபடி ராஜா வந்தான்.

மூள்ளந்தண்டிலே டிபோமெற்றோல்' என்கிற ஸீரோயிட் இன்ஜெக்ஷன் போட்டது போன்ற அதிர்வு அவரைத் தாக்கியது.

ஹூ மைண்ட் யுவர் வேர்ட்ஸ் லெற் தெப் பீசீட்டட் ஐஹாவ்சம்.'(வார்த்தைகளை அளந்து பேசு நான் வருகிறேன் அவர்களை இருக்கச் சொல்)

அவர் நீச்சல் தடாசத்தை விட்டு வெளியே வந்தார். அப்போது தான் டாக்டர் சிவா தம்மை இன்று பதினொருமணிக்கு வந்து சந்திப்பது பற்றிய அப்பாயின்ட்மெண்ட் அவர் நினைவில் உறைத்தது..

கதவைத் திறந்தான் ராஜா.

வெளியே ஒருவர் அப்பாவும் மகனுமாக இருக்கலாம் பெரியவர் நல்லெண்ணெய்க் கறுப்பு. பையன் ஆபிரிக்கக்கறுப்பு. அவர்களை, ''கம் இன்! டாடி வில் பி ஹியர் இன் ஏ மோமென்ட்'' (உள்ளே வாங்கோ அப்பா வருகின்றார்) என்று வரவேற்றான். இருவரும் வரவேற்பு அறையிலே போடப்பட்டிருந்த படகு சோபாக்களிலே வசதியாக அமர்ந்தார்கள்

''ஐ யாம் ராஜா! யூஆர்...'' (எனது பெயர் ராஜா. உங்களுக்கு) என்றவாறு வலக்கையை நீட்டினான் ''ஐயாம் குமார் கிளாட் டு மீட் யூ (எனது பெயர் குமார். உங்களை சந்தித்ததில் சந்தோஷமடைகிறேன்) என்று கறுத்த பையன் வெண்சிரிப்பு உதிர்த்து அவன் கையைப்பற்றி குலுக்கினான்.

கையைவிடுவித்துக் கொண்ட ராஜா கண்களால் ஒரு முறை கறுத்த பையனை உற்றுப்பார்த்துவிட்டு, 'அங்கிள்! இஸ் ஹி யுவர் சன்? (மாமா, இவர் உங்களது மகனா) என்று பெரியவரிடம் கேட்டான். பிறகு என்ன நினைத்தானோ அவர் பதில் சொல்வதற்குள், ''வை இஸ் ஹி ஸோ பிளாச்?'' (இவர் ஏன் இவ்வளவு கறுப்பு) என்று கேட்டான்.

குமார் பரிதாபமாக தன் அப்பாவைப் பார்த்தான்.... அவர் எதுவும் பேசவில்லை .. முகத்தில் மட்டும் ஒருவகை இறுக்கம் ..

ராஜா திரும்பத் திரும்ப கறுத்த பையனையே பார்த்தான். பள்ளியில் அவன் பேசுவது. பழகுவது எல்லாம் வெள்ளைக்கார சிறுவர்களுடன் தான். அவனை யாரும் கறுப்பன் என்று சொல்வதில்லை. ஆனால் இந்தியர்கள் பொதுவாக கறுப்பு நிறம்; நீ மட்டும் எப்படி வெள்ளை நிறமாக இருக்கிறாய் என்று மட்டும் அடிக்கடி கேட்பார்கள் இந்த நிறம் பரம்பரையானது... அப்பாவும் அம்மாவும் நல்ல வெள்ளை நிறம் என்று பெருமையாக சொல்வான்... அவன் வகுப்பில் ஒரே ஒரு கறுப்பு நிற இந்தியன் படிக்கிறான். அவனை இவன் வெள்ளைக்கார சிறுவர்களோடு சேர்ந்து 'பிளாக்ஸ்' என்று சொல்லிச் சிரிப்பான்...

''கும்! ரீயலி ஐஃபீல்ஃபோர் யூ! யூ ஆர்டுடார்க்வூவில்ஹாவ் நே கேர்ல்ஃபிரண்ட்ஸ் டெல் மிஹூஇஸ் கொயிங் டு மெரி யூ?'' (கும்! உண்மையில் உன்னையிட்டு நான் கவலைப் படுகிறேன். நீ சரியான கறுப்பு ஆதலால் உனக்கு பெண்சிநேகிதர்கள் இருக்க மாட்டார்கள். யார் உன்னை மணக்கப்போகிறார்கள்) ராஜா மகத்தான நகைச்சுவைத் துணுக்கினைச் சொல்லி விட்டவனைப் போல் குரல் எழுப்பிச் சிரித்தான்.

சிவாவுக்கு நா உலர்ந்தது. ஆயிரம் எரிநட்சத்திரங்கள் ஏககாலத்தில் தமது தலை மீது அறுந்து விழுந்ததுபோல் அவர் அவதிப்படலானார் இந்த அவமதிப்பு அவலங்களில் இருந்து அவர்களைக் காப்பாற்றுவது போல் சாம்யோ வந்து சேர்ந்தார். ராஜா தன் அறைக்கு மீண்டான் டி.வியில் கிரிக்கெட் மாட்ச் தொடர்ந்தது.

டாக்டர் சிவா சிட்னி முருகன் ஆலய திருப்பணிச் சபையின் பொருளாளர். யாரைச் சந்தித்தாலும் முருகன் ஆலயத்திற்காக வந்துள்ள வரைபடங்கள். தேவைப்படும் நிதி இடையிடையே முருகன் அற்புதங்கள், தமிழ்நாட்டு முருகனின் தலங்கள், அவற்றின் ஸ்தல புராணங்கள் பற்றியெல்லாம் நேரம் தெரியாமல் பேசுவது அவர் சுபாவம். பேச்சுகளுக்கு நடுவில் இரண்டு கப் காப்பியாவது குடிப்பார் 'ஐ யாம் ஏ சவுத் இந்தியன் காபி அடிக்ட்!' (நான் தென் இந்திய காபி குடித்துப் பழக்கமுள்ளவன்) என்று கூறுவார். ஆனால் இன்று? அடுத்த வெள்ளிக்கிழமை முருக பக்தர்களின் விசேட கூட்டமொன்று றொக் டேல் கேர்ள் ஹைஸ்கூலில் நடைபெறுமென்று சொல்லப்பட்ட சமாசாரத்திற்கு மேல் அவருடைய பேச்சு விரியவில்லை. காப்பியைக் கூட மறுத்துவிட்டார். அதிசயம்! கூட்டம் பற்றிய தகவலைச் சொல்வதற்கு மட்டும் மகனையும் அழைத்துக் கொண்டு ஞாயிற்றுக்கிழமையின் இரண்டு மணி நேரத்தினை விரயமாக்குவதற்கு அவர் வேலையற்றவரும் அல்லர்.

சிவா அவசரமாக தன் மகனுடன் புறப்பட்டார். ஏன்?

என்ன நேர்ந்தது? சாம்யோ குழப்பினார் அநேக வினாக்கள் மனதிலே குதியாட்டம் இட்டன இனந்தெரியாத உணர்வின் உந்துதல் நெஞ்சிலே... ஒரு ட்ரிங்ஸ் மிக்ஸ் செய்து எடுத்து சிந்தனை மூலையிலே' சென்று அமர்ந்தார். ஒரு ஞாயிறு வீட்டின் அந்த 'மூலையை' அவர் நாடுவது வழக்கத்திற்கு விரோதமானது.

லல்லி எதுவும் பேசவில்லை. அவருக்கு மூட் அவுட்டாகி விட்டால் அவரைத் தனிமையிலேயே விட்டுவிட வேண்டும் என்பதை நீண்ட தாம்பத்திய அனுபவத்தில் அவள் தெளிவாக அறிந்திருந்தாள்.

அசாதாரணமாக அப்பியிருந்த மௌனத்தை ஊடறுத்து போன் கிணுகிணுந்தது. 'த கோல் ஃப்ரம் சிவா' (சிவாவிடம் இருந்து போன் வந்துள்ளது) என்று கூறி கோட் லெஸ் போனைக் கொண்டு வந்து அவரிடம் லல்லி கொடுத்தாள்

சிவா நிறுத்தி மிகவும் நிதானமாகப் பேசினார்.

முதலில் வீட்டிலே நடந்த சம்பவத்தை நேரில் சொல்வதற்கு மன்னிப்புக் கோரி நடந்த வர்த்தமானத்தினை அப்படியே கூறினார். ராஜாவை மனம் நோகச் செய்ய விரும்பவில்லை அவன் சிறுவன். கிளிப்பிள்ளை போல. எங்கேயோ உலவும் கருத்துக்கள் அவனைத் தாக்கி இருப்பது அவன் குற்றமல்ல. குடியேறிய நாட்டிலே நாங்கள் காலூன்ற வேண்டும் என்று வெறியிலே புதிய தலைமுறை அனுபவிக்கும் அவலத்தினை உணரச் செய்த ஞானி' என்று ராஜாவைப் பாராட்டினார். இதுவரை வாசுதேவனை 'லூஸ்' என்றும் 'கிறுக்கன்' என்றும் புறங்கூறியதற்கு வருத்தம் தெரிவித்தார் பல பஜனை மையங்களையும் முருகன் கோயில்களையும் நிறுவுவதிலும் பார்க்க நமது வருங்காலச் சந்ததியினர் தமிழ் கற்பதற்கு நிலையான ஒரு நிறுவனம் தோற்றுவிப்பதிலுள்ள மகத்துவம் பற்றிய ஞான விடிவு தமக்கு ஏற்பட்டுள்ளதாகக் கூறினார்.

வாசுதேவன் சொல்வது போல் இன்று நம்மவர்கள் கடைப்பிடிக்கும் போக்குநீளுமானால் அடுத்த நூற்றாண்டில் நமது மூன்றாவது அல்லது நான்காவது தலைமுறையினர் அமெரிக்காவில் குடியேற்றப்பட்ட அடிமை நீக்ரோக்களின் வம்சாவழியினரைப் போல் நமது 'வேர்களை'த் தேடி யாத்திரை மேற்கொள்ளும் அவலம் ஏற்படும் என அச்சம் தெரிவித்தார். ஈற்றிலே தம்முடைய மனப்பாரத்தினை இறக்கி வைப்பதற்காக மன்னிப்புக் கோரி முடித்தார்

பதிலுக்கு எதுவுமே பேசாது 'உம்' கொட்டிக் கொட்டிக் கொண்டிருந்த சாம்யோ 'சிவா! இப்பொழுது தான் என்னுடைய குழப்பங்களும் தெளிவு பெறத்தொடங்யுள்ளன தாங்க் யூ ஃபோர் யுவர் பிராங்நெஸ்' (உங்களது வெளிப்படையான பேச்சுக்கு நன்றி) என்று கூறி முடித்தார்.

மறுநாள்... அன்று முழுவதும் வீட்டுடன் தொடர்பு கொள்வதை சாம்யோ தவிர்த்தார். அவர் வீடு திரும்பிய போது இரவு பத்துமணிக்கு மேலாகிவிட்டது.

'ராஜா எங்கே?...' வழக்கமான ஆங்கிலத்தை தவிர்த்தார்.

'ஒன் பெட்' (படுக்கைக்கு போய் விட்டான்) லல்லியின் பதில்.

'தூங்கிறான் என்று சொல். அடுத்த தலைமுறையைத் தூங்க வைப்பதிலேதான் நாங்கள் வளமான வாழ்க்கையை அமைத்துக் கொள்கிறோம். டிசம்பர் பன்னிரண்டு. ராஜாவின் வெக்கேஷன் துவங்குது. பதினாலு மூணு பேரும் மெட்ராஸ் போகிறோம், பிளைட் கன்ஃபோம்பண்ணிட்டேன். நம்மைப் பற்றியும் நமதுஎதிர்காலம் பற்றியும் யோசிப்பதற்கு ஓர் ஒய்வு தேவை. ராஜா தானும் பிளாக் மேன் தான், தனது பரம்பரை பிளாக் தான் என்பதை உணர்வதற்கான காலம் வந்தாச்சு ..'

பேசுவதற்கு லலிதாவுக்கு வார்த்தைப் பஞ்சம் ஏற்பட்டது. திரும்ப வந்ததும் ராஜா ஒழுங்காகத் தமிழ் வகுப்புகளுக்குப் போவான்.. இந்த வீட்டிலும் தமிழ் மணம்வீசும்!' மௌனமானார். ஓமந்தூரிலிருந்து சுடச்சுட இறக்கப்படும் மல்லிகைப் பூ இட்லியின் மணம். அவர் மூக்கிலே தவழ்ந்து வருவது போன்ற சுகம் மானசீகமாக அவருக்கு ஏற்படலாயிற்று.

நன்றி: 'இந்தியன் ருடே'


முத்திங்கள் இதழ் வெளியீட்டு விழா

காலம்: 19-01-92 ஞாயிற்றுக்கிழமை
காலை 9-00 மணி.

இடம்: யா/மெமோறியல் ஆங்கில பாடசாலை.
மானிப்பாய்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பனை தென்னை வள
அபிவிருத்தி ஒன்றியம்

சி /3797


## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



**வீரவேங்கை ரவி**

(கணேசலிங்கம் ரவிச்சந்திரன்)

வீரமலர்வு 12-06-68

வீரச்சாவு 31-01-88

சுன்னாகத்தில் இந்தியப்படையுடனான மோதலில் தன்னைத்தானே சுட்டு வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

தமிழீழ மண்ணிற்காக - ரவியே
உன்னை அர்ப்பணித்த
வேளையிலே — — —
அந்நியனின் வேட்டைக்காக
உன் உடல் தான் பலியானதடா
ஆனால் எம் நெஞ்சங்களில்
உன் இலட்சியத்தாகங்கள்
வளர்கின்றன.

கட்டுவன், தெல்லிப்பளை. --- குடும்பத்தினர்

(சி/3789)

# அணு ஆயுத பலமிக்க 'இஸ்லாமிய சம்மேளனம்'

## புதிய அரசியல் ஒழுங்கிற்கு ஒரு தடை

உலகில்'இஸ்லாமிய அணுக் குண்டு' உருவாகி விட்டது என்பது தற்பொழுது திட்டவட்டமாக உறுதியாகி விட்டது. இதை அமெரிக்காவும் ஊர்ஜிதப்படுத்தியுள்ளது. நீண்டகாலமாக இஸ்லாமிய உலகம் எதிர்பார்த்ததும் அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலகம் விரும்பாததுமான இந்த இஸ்லாமிய அணுக் குண்டு உலகில் நிகழ்ந்த எதிர்பாராத சம்பவங்களினால் - சோவியத் பேரரசின் சிதைவு - எதிர்பார்த்ததைவிட விரைவிலேயே நடைபெற்றுவிட்டது.

### பாகிஸ்தானிடம் அணு ஆயுதம்

கெடுபிடி யுத்த காலத்தில் அமெரிக்காவின் செல்லப் பிள்ளையாக இருந்த பாகிஸ்தான் அமெரிக்காவின் விருப்பத்திற்கு மீறியே அணுவாயுத தயாரிப்பில் ஈடுபட்டது. ஆப்கானிஸ்தானில் இருந்த சோவியத் இராணுவமும், தென்னாசியாவில் 'பலம் பொருந்திய' சோவியத்தின் நண்பனான இந்தியாவும் இருந்தமையால் அணுவாயுத தயாரிப்பில் பாகிஸ்தான் ஈடுபட்டு வந்த போதும் அமெரிக்கா அதில் தீவிர கவனம் செலுத்தவில்லை. ஆனால் ஆப்கானிஸ்தானில் இருந்து சோவியத் இராணுவ வெளியேற்றமும், கெடுபிடிப் போர் தணிவும் அமெரிக்காவை பாகிஸ்தானின் அணுவாயுத உற்பத்தி தொடர்பான விடயத்தில் கவனத்தைச் செலுத்தச் செய்தது. இதன் விளைவு 1990ஒக். இல் பாகிஸ்தானுக்கான இராணுவ, பொருளாதார உதவிகளை அமெரிக்கா நிறுத்தியுள்ளமையாகும். ஆனால் பாகிஸ்தான் அணு ஆயுத விடயத்தில் அமெரிக்காவின் மிரட்டலுக்குப் பணியவில்லை. அது அணு ஆயுதத்தை தற்பொழுது உற்பத்தி செய்துள்ளது, முடித்துள்ளது.

### சோவியத் வீழ்ச்சியும் அணு ஆயுத பரவலும்

இதேவேளை சோவியத் வல்லரசின் சிதைவானது அணுவாயுதம் ஒன்றிற்கு ஏங்கியிருந்த இஸ்லாமிய உலகத்திற்கு இந்த அணுவாயுத உற்பத்தி தொடர்பாக இருந்த சகல தடைகளையும் நீக்கியது. சோவியத்சிதைவால் உருவான புதிய நாடுகளில் சில இஸ்லாமிய நாடுகள் அணுவாயுதப் பலம் பொருந்தியவையாகும். இக் குடியரசுகள் அணு ஆயுதத்தை மட்டுமல்ல அதன் தயாரிப்புக்குரிய தொழில் நுட்பம், மூலவளம், மூளை, (விஞ்ஞானிகள்) என்பனவற்றையும் கொண்டிருந்தன. இந்நிலையில் அணுவாயுதம் இன்று இஸ்லாமிய உலகத்தின் முன் கொட்டிக் கிடக்கின்றது என்றே கொள்ளலாம். இந்நிலையில் இஸ்லாமிய உலகத்தில் அணு ஆயுதம் விரைவில் பரவுவதை அமெரிக்காவினால் தடுத்துவிட முடியாது.

இதை உறுதிப்படுத்துமாப் போல் சில தகவல்களும் வெளிவந்துள்ளன. சோவியத்தில் இருந்து பிரிந்த புதிய நாடான கசக்கஸ்தான் யுரேனியத்தை இன்றைய நாடுகளுக்கு சாய விலையில் வழங்குவதற்கு தயாராக இருப்பதாக சி.ஐ.ஏ. அறிக்கைகள் தெரிவிக்கின்றன. அவற்றின் முதற் கட்டமாக பாகிஸ்தான் பெருமளவு யுரேனியத்தைப் பெற்றுள்ளதாகவும் அவ்வறிக்கைகள் மேலும் தெரிவிக்கின்றன.

இந்நிலையில், அணுவாயுத வல்லமை பெற்ற பல அடிப்படைவாத இஸ்லாமிய நாடுகள் உருவாகக் கூடிய வாய்ப்புக்கள் உள்ளன. இதற்காக இஸ்லாமிய நாடுகள் முயற்சிக்கவும் இல்லை. அதேவேளை, புதிய நாடுகளைக் கட்டுப்படுத்தி வைத்துவிடவும் முடியாது. சோவியத் யூனியன் சிதைவில் உருவாகிய புதிய நாடுகள் பெரும் பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ளன அவர்களுக்கு சர்வதேச சந்தையில் விற்பனை செய்வதற்கும், தமது பொருளாதாரத்தைக் கட்டி நிமிர்த்தவும் ஆயுதங்களைத் தவிர வேறு ஒன்றும் கையில்இல்லை.

இந்நிலையில், போதிய நிதி உதவிகளைச் செய்யக் கூடிய எண்ணெய் வளம் மிக்க தமது மதத்தவருக்கு அணு ஆயுதங்களையும், அவற்றின் உற்பத்திக்குத் தேவையான தொழில்நுட்பம், மூலவளம் ஆகியவற்றைக் கொடுப்பதன் மூலம் அவை தமது நிதிநெருக்கடியைச் சமாளித்துக்கொள்ளக் கூடும். இதேபோன்றே விஞ்ஞானிகளுக்கும் பெரும் தொகைப் பணத்தை வழங்கி வளமுள்ள இஸ்லாமிய நாடுகள் பயன்படுத்திக் கொள்ளக் கூடும். முன்னாள் சோவியத் விஞ்ஞானிகளை 'அபாயகரமான நாடுகள், தமது நாடுகளில் சேவைக்கு அமர்த்திக் கொள்ளக் கூடும் என அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர்' டிக்செனி தெரிவித்தார்.

### 'இஸ்லாமிய நாடுகள் சம்மேளனம்'

இந்நிலையில், தீவிர இஸ்லாமிய அடிப்படைவாத நாடுகளுக்குள் இடையில் அணுவாயுதம் வருவதும், அது உலகில் புதிய பிரச்சினைகளை உருவாக்குவதும் தவிர்க்க முடியாது. இதேவேளை, அணுவாயுதவல்லமை கொண்ட புதிய இஸ்லாமிய நாடுகளின் சம்மேளனம் ஒன்றும் உருவாகலாம் என்றும் அமெரிக்கா கருதுகின்றது. அமெரிக்கா செனட்டரான லார்றி பிரெஸ்லர் துருக்கியில் இருந்து பாகிஸ்தான் வரையிலான இஸ்லாமிய நாடுகள் சம்மேளனம் ஒன்று உருவாக்கப்படலாம் என அவர் எச்சரிக்கை செய்துள்ளார்.

இதேவேளை, செனட்டர் லார்றி பிரெஸ்லர் குறிப்பிட்டதைவிட இஸ்லாமிய உலகம் பரந்ததாகும். பாகிஸ்தானில் வட ஆபிரிக்காவை உள்ளடக்கி ஆபிரிக்காவின் மேற்குக் கரையான (மெரோக்கோ வரையும்) இஸ்லாமிய உலகம் பரந்துள்ளது. அதேவேளை, இதற்கு வெளியே உலகில் கூடுதலான முஸ்லிம்களைக் கொண்ட இந்தோனேசியாவும். அடுத்த இடம் வகிக்கும் பங்களாதேசும் உள்ளன. மலேசியாவும் பலம் பொருந்திய ஓர் இஸ்லாமிய நாடாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

### 'உலகத் தலைமைக்கு புதிய நெருக்கடி'

இந்நிலையில், இன்று உலகிற்குத் தனித்துவமாக தலைமை தாங்கவும், உலகிற்கு புதிய அரசியல் ஒழுங்கு ஒன்றை உருவாக்கவும் முற்பட்டுள்ள அமெரிக்காவிற்கு இஸ்லாமிய அடிப்படைவாதிகளிடம் சென்றடைந்துள்ள/சென்றடையவுள்ள அணுவாயுதங்களினால் புதிய சிக்கல்கள் உருவாகியுள்ளன. இவை அமெரிக்காவின் புதிய அரசியல் ஒழுங்கு எதிர்நோக்கும் முக்கிய நெருக்கடிகளில் ஒன்றாகும். அதேவேளை இந்த அணுவாயுத பரவல்களால் ஏற்படும் விளைவுகளுக்கும் அமெரிக்காவே பதில் சொல்ல வேண்டியநிர்ப்பந்தமும்உண்டு.

### அமெரிக்காவின் புதிய அணுகுமுறை

இந்நிலையில் அமெரிக்காவின் புதிய வெளியுறவுக் கொள்கை இராணுவக் கொள்கை, பொருளாதாரக் கொள்கை என்பனவற்றில் பெரும் மாற்றங்கள் ஏற்படலாம் ஏற்பட வாய்ப்புக்கள் உண்டு. இதில் இந்தியா முக்கியஇடம் பெறும் எனவும் துணிந்துகூறலாம். அதற்கான சமிக்ஞைகளும் தெரியத் தொடங்கியுள்ளது.

இதன் ஒரு அம்சமாகவே இந்தியா அணுவாயுதத் தயாரிப்பில் ஈடுபடவில்லை என்ற அமெரிக்க செனட்டர் லார்றி பிரெஸ்லரின் அறிவிப்பாகும். அத்தோடு பிரெஸ்லர் 'திருத்தத்தை' - அணுவாயுதஉற்பத்தியில் ஈடுபடும் நாடுகளுக்கு இராணுவ நிதி உதவிகளை நிறுத்துதல் என்ற விசேட சரத்து - இந்தியாவிற்கு விஸ்தரித்து அமெரிக்க உதவியை இந்தியாவிற்கு மறுக்க வேண்டிய தேவை இல்லை என்ற செனட்டர் லார்றி பிரெஸ்லரின் அறிவிப்பும் ஆகும். மேலும் இந்தியாவிற்கு இஸ்லாமிய அடிப்படைவாத நாடுகளால் அணுவாயுத அச்சுறுத்தல் உள்ளது என்ற இந்தியாவிற்காகப் பரிந்து பேசும் எச்சரிக்கையுமாகும்.

இதேவேளை இந்தியாவும் விரும்பியோ விருப்பமில்லாமலோ அமெரிக்கசார்புக் கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டிய நிர்ப்பந்தமே உள்ளது இந்தியாவில்ஏற்பட்டுள்ள பாரிய பொருளாதர நெருக்கடி இதற்கும் பிரதான காரணமாகிறது. இதன் காரணமாக இந்தியாவும் தடுமாற்றத்துடன் தனது வெளியுறவுக் கொள்கையைமாற்றி அமைத்துவருகிறது இதன் வெளிப்பாடே முன்னாள் இந்தியபிரதமர் இந்திராகாந்தி விரட்டிய கொக்கோ கோலாவின் -அமெரிக்காவின் - இந்தியா வருகையாகும். இதிலிருந்தே இஸ்லாமிய அடிப்படைவாதத்திற்கு எதிரான புதிய ஒழுங்கில் இந்தியா குறிப்பிடக்கூடிய பங்காற்றும் வாய்ப்பு உண்டு என்பதைத்தெளிவாகப்புரிந்து கொள்ளலாம்.

### மையம் மாறுகிறது

அடுத்துக் கருத்திற்கொள்ள வேண்டியது அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் டிக்செனி அடிப்படைவாத இஸ்லாமிய நாடுகளை 'அபாயகரமான நாடுகள்' எனக் குறிப்பிட்டமையும் அமெரிக்க ஆயுதக் குறைப்பிலோ அன்றி அமெரிக்காவின் ஏவுகணை எதிர் ஆயுதத்திட்டம், மற்றும் நட்சத்திரப் போர் திட்டம் ஆகியவற்றை நிறுத்தப் போவதில்லை. தொடர்ந்தும் ஈடுபடும் என்ற அறிவிப்பும் ஆகும், மேலும், உலகில் ஐரோப்பிய வல்லரசுகளுக்கிடையில் கெடுபிடி யுத்தம் முடிவிற்கு வந்தாலும், ஐரோப்பாவிலும், ஆசியாவிலும் உள்ள அமெரிக்க இருப்பதுமிகவும் பொருத்தமான தொன்று எனவும் டிக்செனி தெரிவித்தார்.

அதாவது திரு டிக்செனியின் கூற்றின்படி ஆயுதப் போட்டியும், கெடுபிடி யுத்தமும் ஐரோப்பாவிற்கு வெளியில் இன்றும் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்பதைத் தெரிவிப்பதாகவும் கூறலாம்.

அமெரிக்கச் செனட்டர் லாரி பிரெஸ்லர் கூறிய உருவாகவுள்ள இஸ்லாமிய நாடுகளின் சம்மேளனம் இதற்கு மையமாக மாறக் கூடும். இதன்படி தற்பொழுது தணிந்துள்ள கெடுபிடி யுத்தம் ஒரு சிறிது காலத்தின் பின் தீவிர இஸ்லாமிய அடிப்படை வாத கோட்பாட்டைக் கொண்ட இஸ்லாமிய சம்மேளனத்தை மையமாகக் கொண்டு உருவாகலாம் என எதிர்பார்க்கலாம்.

இந் நிலையில், அமெரிக்காவின் புதிய இராணுவ வியூகத்தில் ஒன்று இஸ்லாமிய உலகைச் சூழ்ந்ததாக இருக்கும். அதில் இந்து சமுத்திரமும், இந்தியாவும் பெரும்பங்கு வகிக்கும் வாய்ப்புக்கள் உண்டு. அதாவது சோவியத்யூனியனைச் சூழ்ந்திருந்த நேட்டோ அணி தனது மையத்தை இஸ்லாமிய உலகை நோக்கியதாக மாற்றி அமைத்திருக்கும். இதில் சிலவேளை, மேற்கு அணியின் கூட்டில் ரஷ்யாவும் இடம் பெற்றாலும் ஆச்சரியம் ஒன்றும் இல்லை.

ஜெயராஜ்

---

# கணக்கு காட்டப்படாத 'ஸ்கட்' பாக்தாத்திடம் உண்டு

## ஜோர்ஜ் புஷ்

(வாஷிங்டன்)

கணக்கில் காட்டப்படாத பெரும் எண்ணிக்கையிலான 'ஸ்கட்' ஏவுகணைகளை பாக்தாத் இன்னமும் வைத்துக் கொண்டிருப்பதால் ஈராக்கிய அணுஆயுத திறனாற்றல் வசதிகளை மேற்கொண்டும் விசாரணை செய்வது அவசியம் என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க பாராளுமன்றத்தில் உரையாற்றிய ஜோர்ஜ் புஷ் அணுஆயுதம் தயாரிக்க ஈராக் முயற்சி செய்வதாக ஈராக்கிடம் இருந்து கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் ஊர்ஜிதம் செய்கின்றன என்று குறிப்பிட்டார்.

வருடம் ஒன்றுக்கு நான்கு குண்டுகளை தயாரிக்க போதுமான அணுசக்திஎரிபொருளை உற்பத்தி செய்வதற்கான சாதனங்கள் தன்னிடம் இருப்பதை ஈராக் ஒப்புக் கொண்டிருப்பதாகவும்,

இதனால் ஈராக் மீது சந்தேகிக்கப்படுவது நியாயம் தான் என்றும், வேறும்சில காரணங்கள் ஈராக்மீது இருக்கின்றன என்றும் ஜோர்ஜ்புஷ் தனது உரையில் குறிப்பிட்டார்.

---

# பல்கலை மாணவர் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக அனைத்து மாணவர்களுக்குமான விசேட பொதுக்கூட்டமொன்று இன்று காலை 10.00 மணிக்கு கைலாசபதி கலை அரங்கில் நடைபெறும் என மாணவர் பேரவை அறிவித்துள்ளது. அனைத்து மாணவர்களும் தவறாது சமூகம் தருமாறு கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளார்கள்.

---

# பாகிஸ்தானுடன் நட்புறவு; பிரான்ஸ் அரசு முடிவு

(பரிஸ்)

பாகிஸ்தானுடன் அணுவாயுத மற்றும் இராணுவத்துறையிலான ஒத்துழைப்பை தொடர்ந்து பராமரித்து வருவது என்று பிரான்ஸ் முடிவு செய்துள்ளதாக பிரான்சிய பிரதம மந்திரி லிபத்கிரைசான் தெரிவித்துள்ளார்.

பிரான்சுக்கு சென்றுள்ள பாகிஸ்தானிய பிரதம மந்திரி நவாப் ஷெரீப்பை சந்தித்து நேற்று முன்தினம் பரிஸில் நடத்திய விருந்துபசாரத்தின் போதே இதனை கிரைசான் தெரிவித்தார்

ஆனால் அணுவாயுத மற்றும் இராணுவ ஒத்துழைப்பு உலக நாடுகளின் படைக் குறைப்பு ஏற்பாடு மற்றும் அணுவாயுத பரவல் தடுப்பு ஒப்பந்தத்தின் கட்டமைப்புக்குள் உட்பட்டதாகவே அமைந்திடும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

---

# கொக்கோகோலா மீண்டும் இந்தியாவிற்குள் பிரவேசம்

(டில்லி)

கொக்கோக்கோலா என்ற அமெரிக்க குளிர்பான விற்பனை மீண்டும் இந்தியாவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

பிரதமர் பி. வி. நரசிம்மராவின் அரசு அறிமுகப்படுத்தும் புதிய பொருளாதாரக் கொள்கையின் அடிப்படையில் வெளிநாட்டுத் தொழில் நிறுவனங்கள் இந்தியாவில் முதலிடு செய்ய இந்தியா அனுமதி வழங்க ஆரம்பித்துள்ளது. இதன் முதற்கட்ட நடவடிக்கையாக கொக்கோக் கோலா உட்பட ஐந்து பாரிய வெளிநாட்டுத் தொழில் நிறுவனங்கள் இந்தியாவில் தொழிலை ஆரம்பிக்க நரசிம்மராவ் அரசு அனுமதித்துள்ளது.

இந்திராகாந்தி ஆட்சியின் போது கொக்கோக்கோலா வியாபாரத்திற்கு இந்தியாவில் தடைவிதிக்கப்பட்டிருந்தது

---

எட்டியாந்தோட்ட

ஏற்பட்ட சம்பவத்தையடுத்து இவரை கைது செய்ததாக பொலிசார் தெரிவித்துள்ளனர்

வின்சன்ட் பெரேரா ஐ. தே. க. அதிருப்தியாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

---

சிங்களக்

தில் தடைப்பட்டிருந்தன. இப்பொழுது பெரும் எடுப்பில் குடியேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன இப்பகுதியில் வசித்து வந்த தமிழ் மக்கள் விரட்டியடிக்கப்பட்டுள்ளனர்.

காடுகள் வெட்டப்பட்டு புதிய குடியிருப்புகள் சிங்களவர்களுக்கென அமைக்கப்பட்டு வருகிறது புதிய தெருக்களும் அமைக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

## இந்தியா வெற்றி

(மெல்போர்ன்)

அவுஸ்ரேலியாவில் நேற்று நடைபெற்ற ஒருநாள்கிரிக்கட் ஆட்டத்தில் இந்திய அணி மேற்கிந்திய அணியை தோற்கடித்ததன் மூலம் இறுதி ஆட்டத்தில் விளையாட தகுதி பெற்றுள்ளது.

மேற்கிந்திய அணி 8 விக்கற் இழப்பிற்கு 175 ஓட்டங்களையும், இந்தியஅணி 5 விக்கற் இழப்பிற்கு 176 ஓட்டங்களையும் பெற்றது. சிறீகாந்த் வேகமாக 60 ஓட்டங்களைப் பெற்றார்.

இறுதி ஆட்டம்நாளைஅவுஸ்ரேலிய அணிக்கும் இந்திய அணிக்குமிடையில் அவுஸ்ரேலியாவில் நடைபெறும்.

# காஷ்மீரில் மனித உரிமை மீறல் விசாரணை நடத்த வேண்டும்

## -பிரிட்டன் வெளிவிவகார அமைச்சர் கோரிக்கை

(டில்லி)

காஷ்மீரில் இந்தியாவின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும்பகுதிகளில் மனித அடிப்படை உரிமைகள் மீறப்பட்டமை பற்றி இந்திய அரசு விசாரணை நடத்தவேண்டும் எனவும், பாதுகாப்புப்படையினர் சட்டத்துக்கு அடிபணிந்து நடக்கவேண்டும் என்றும் இந்தியாவுக்கு விஜயம் செய்திருக்கும் பிரிட்டன் வெளியுறவு அமைச்சர் டக்ளஸ் ஹேர்ட் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

டக்ளஸ் ஹேர்ட் ஜனாதிபதி வெங்கட்ராமனையும், மத்திய உள்துறை அமைச்சர் எஸ்.வி. சவானையும் சந்தித்தபோது இக் கருத்துக்களைத் தெரிவித்தார்.

அமைச்சர் சவான் இதற்கு எவ்வித பதிலையும் வழங்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

பயங்கரவாதத்தை எதிர்த்து முறியடிப்பதற்கான முயற்சிகளுக்கும் போதைவஸ்து தடுப்பு மற்றும் பயங்கரவாத நடவடிக்கைகள் பற்றிய தகவல்களைப் பரஸ்பரம் பரிமாறிக்கொள்வதற்கான முயற்சிகளுக்கும் பிரிட்டன் முழுமையான ஆதரவு தரும் என்றும் டக்ளஸ் ஹேர்ட் தெரிவித்தார்.

## ‘ஒரு இல்லத்தில் சில உள்ளங்கள்’

(யாழ்ப்பாணம்)

“ஒரு இல்லத்தில் சில உள்ளங்கள்” என்ற நாவலின் அறிமுகவிழா எதிர்வரும் 19 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு நல்லூர் கம்பன் கோட்டத்தில் நடைபெற உள்ளது. மேற்படி நாவலை திரு. ச. வாமதேவன் எழுதியுள்ளார்.

# இந்தியாவைப் பாதுகாக்க பா.ர. ஜனதாவாலே முடியும்

## -முரளி மனோகர்ஜோசி

சோவியத் ஒன்றியம் இப்போது துண்டு துண்டாக்கப்பட்டுவிட்டதால் அந்தப் பகுதியில் உள்ள முஸ்லிம் அரசுகள் இந்தியாவையும் துண்டாடப் பார்க்கின்றன. இதைத் தனது கட்சி மாத்திரமே தடுத்து நிறுத்த முடியும் என்று வலதுசாரி பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் முரளி மனோகர் ஜோசி கூறினார்.

அயோத்தியில் கூட்டம் ஒன்றில் உரையாற்றும் பேதே அவர் இவ்வாறு கூறினார்.

இந்தியாவின் தேசியக் கொடியை ஜம்மு - காஷ்மீர் மாநிலத்தின் தலைநகர் சிறிநகரில் ஏற்றத்தான் உறுதி பூண்டிருப்பதாகவும் அவர் சொன்னார்.

# காவலிலிருந்து விடுபட்டவர் ஆஸ்பத்திரியில் மரணம்

(பதுளை)

பாதுகாப்புப் படையினரின் காவலிலிருந்து பலத்த காயங்களுடன் விடுதலை செய்யப்பட்ட தோட்டத் தொழிலாளி ஒருவர் ஆஸ்பத்திரியில் மரணமானார்.

விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்ட பின் விடுதலை செய்யப்பட்ட அந்தோனிகிறிஸ்டர் (வயது 23) என்ற குடும்பஸ்தரே பதுளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபின் மரணமானார்.

இது தொடர்பாக மரணமானவரின் மனைவி இ. தொ.கா. பதுளை மாநில காரியாலயத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

# யாகப்பர் தேவாலயத்தில் சிறப்பான பொங்கல் விழா

(குருநகர்)

குருநகர் புனித யாகப்பர் ஆலய பங்குத்தந்தை வண. பீ. எம். இம்மனுவேல் அடிகள் நேற்று முன்தினம் யாகப்பர் தேவாலய மண்டபத்தில் பொங்கல் விழாவினைச் சிறப்பாக நடாத்தினார்.

பொங்கல் சாதம் பரிமாற முன்பாக பண்பாட்டுத்திருப்பலியும்ஒப்புக்கொடுக்கப்பட்டது

“தமிழர் திருநாளை கிறிஸ்துவத்தைத் தழுவிய தமிழர்களான நாங்கள் கொண்டாடுவது பொதுவான ஒரு விடயமாகும்” என்றும் இவர் கருத்துத் தெரிவித்தார். (21)

### தென்னிலங்கை

எனவும் தெரிய வருகிறது.

யாழ்ப்பாணம் வருவதற்கான தீவிர முயற்சியில் இறங்கியிருக்கும் இத் தூதுக்குழுவினர் பெரும்பாலும் இம்மாத இறுதியில் வரலாமென அறிய வருகின்றது. (24)

### குவைத்

நிலையங்களுக்கு நாற்பதினாயிரம் ரூபாய் வீதம் செலுத்தி இவர்கள் சென்றனர் என்றும்,

இவர்களில் 65 பேர் நேற்று முன்தினம் கொழும்பு திரும்பினர். இவர்களுடன் சென்ற ஆறு பெண்களின் நிலை குறித்து தகவல் எதுவும் தெரிவிக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

### ஐக்கியம்

நாட்டுவதிலேயே முக்கிய அக்கறை இருக்கின்றது என்றும், இனம், சமயம், சாதி, நிறம், ஆகியவை இவற்றுக்கு தடைகளாக இருப்பதில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்

அத்துடன் இவரினால், வடகிழக்கு மாகாணசபையைச் சேர்ந்த 170 பட்டதாரி நிர்வாக சேவை பயிலுனர்களுக்கான தமிழ்ப் பயிற்சி வகுப்புகளும் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

### குடியிருப்புக்கள்

பொதுமக்கள் வாழும் பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன. எனினும் பெரியளவிலான சேதம் எதுவும் ஏற்படவில்லை இப்பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பலர் பாதுகாப்பான பகுதிகளை நோக்கி இடம்பெயர்ந்துள்ளனர். (க)

### மீட்கப்பட்ட

- ★ ரி 56-1 ரக துப்பாக்கிகள்-3
- ★ ரி 56 ரக துப்பாக்கிகள்-2
- ★ ரி 81 ரக துப்பாக்கிகள்-3
- ★ ரி 56 ரக துப்பாக்கி ரவைக் கூடுகள்-14
- ★ ரி 81 ரக துப்பாக்கிக்குரிய எறிகணைகள்-2
- ★ ஏ. கே. ரக துப்பாக்கி ரவைகள்-560
- ★ தொலைத் தொடர்பு சாதனம்-1
- ★ திசைகாட்டி-1

### நாய்களை

கான மருந்துகளை அனுப்பவோ அரசு அசிரத்தைகாட்டுவதைக் கருத்திற்கொண்டு இவற்றை அடித்துக்கொலை செய்வதெனத் தீர்மானிக்கப்பட்டது. இவ்வாறு அடித்துக் கொல்லப்படும் ஒரு நாய்க்கு இருபத்தைந்து ரூபாவைவழங்கச் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் முன்வந்துள்ளதாக இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க அதிகாரி நேற்றுத் தெரிவித்தார்.

கட்டாக்காலி நாய்களை இரண்டு வாரங்களுக்குள் ஒழிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும், இவ்வாறு அடித்துக் கொல்வோர்அதனை அந்தந்த பகுதி சுகாதாரப் பரிசோதகர் அலுவலகத்தில் காண்பித்து அதற்கான சான்றிதழைப் பெற்று இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க அலுவலகத்தில் ஒப்படைத்தால் அவர்களுக்கு உரிய பணம் வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

மேற்படிதிட்டத்திற்கு உதவியாகவும், நோய் பரவுவதைத் தடுப்பதற்காகவும் வளர்ப்பு நாய்களுக்கு லைசன்ஸ் வழங்கப்படவுள்ளதுடன், அவற்றிற்கு ஊசி மருந்தும் ஏற்றப்படவுள்ளது. (ச)

### உதவி

நாடுகள் கடந்த சில காலங்களாக தாராளமாக வழங்கும் நிதி யுத்தத்தை நீடிக்கவே அரசுக்குஉதவியுள்ளது என்றும்,

உதவும் நாடுகள் உதவி வழங்குவதை நிறுத்தினால் சிறிலங்கா அரசியல் தீர்வு ஒன்றை நாடும் என்பதில் எங்களுக்கு நம்பிக்கையுண்டு இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஏற்படும் வரை உதவியை நிறுத்தும்படி மனிதாபிமானத்தின் பெயரால் கேட்டுக் கொள்கிறோம் என்றும் அந்தக் கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

### இலங். இனப்பிரச்

9.30 மணியளவில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலை அரங்கில் நடைபெறவுள்ளது.

திரு. சு.இராசநாயகம் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் திரு. ரவி அவர்கள் வெளியீட்டுரையை நிகழ்த்துவார். பேராசிரியர் திரு.என். பாலகிருஷ்ணன், திரு. குமாரவேல், சாளரம் பிரதம ஆசிரியர் திரு. அ. கௌரிகாந்தன், திரு. சிவசுப்பிரமணியம் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்துவார்கள். நூலாசிரியர் திரு. மு. திருநாவுக்கரசு ஆசிரியர் உரை நிகழ்த்துவார்.

### பீரங்கித் தாக்கு

கல்முனைக் கடற்பகுதியில் இருந்து சிறிலங்கா கடற்படையினரால் குருநகர், பாசையூர் பகுதிகளை நோக்கி பீரங்கித் தாக்குதல் நடாத்தப்பட்டது

நேற்று மாலை 5.00 மணி முதல் இரவு 8.30 வரை இடையிடையே நடாத்தப்பட்ட இத் தாக்குதல்களால் பெரியளவில் சேதம் எதுவும் ஏற்படவில்லை.

### தொண்டர்

கப்படுகிறது. 31-12-89 க்கு முன் சேவையாற்றிய தொண்டர் ஆசிரியர்கள் நேர்முகத் தேர்வில் தெரிவு செய்யப்பட்டு இப்போது சேவையிலில்லாது இருப்பினும் நியமனம் வழங்கப்படும் என யாழ். கல்விக் கோட்டப் பணிப்பாளர் இ. வேலாயுதம் தெரிவித்தார்.

தெரிவு செய்யப்பட்ட தொண்டர் ஆசிரியர்கள் பெயர்ப்பட்டியல் கோட்டக் கல்வி அலுவலகங்கள்; கல்வித் திணைக்களம் மற்றும் உதவி அரசாங்க பணிமனைகளில் இன்று ஒட்டப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.


## காணவில்லை

நாரந்தனை தெற்கைச் சேர்ந்த பிரகாசம் அந்தோனிப்பிள்ளை ஆகிய எனது மாமனாரைக்காணவில்லை. இவர்மானிப்பாய்மாவட்ட வைத்தியசாலையில் இருந்து 15-1-92 புதன் கிழமை காலையில் வார்ட்டைவிட்டு ஓடிவிட்டார். இவரைக் காண்பவர்கள் யாழ்ப்பாணம் புகையிரத அகதிமுகாமில் கொண்டுவந்து ஒப்படைக்கும்படி மிகவும் தாழ்மையாக வேண்டுகின்றேன்.

(2107) செ. ரஞ்சிதன் (மருமகன்)

## அறிவித்தல்

சிவப்புநிற **MD - 70** (செசி இல. 1401556)

மோட்டார் சைக்கிளின் உரிமையாளர் அல்லது பறிகொடுத்தவர் அல்லது இதை யாராவது வைத்திருந்ததைக் கண்டவர்கள் தயவுசெய்து ஈழநாதத்துடன் தொடர்பு கொள்ளவும்.

[சி/3801]

## புதிய தொழில் பயிற்சிநெறிகள்

RADIO T. V. & VIDEO DECK

AIRCONDITION AND REFRIGERATION

சிறந்த விரிவுரையாளரினால்

இலகு பயிற்சிநெறி

விசேட செய்முறைப் பயிற்சிகள்

ஆரம்பம்: 20-01-1992

விபரங்களுக்கு:

NORTH CEYLON TECHNICAL INSTITUTE

14, St. Peter's Lane

Hospital Road,

Jaffna.

(சி/3799)

விடுதலைப்புலிகள்

கலை, பண்பாட்டுக் கழகத்தின்

ஆதரவில்

நாடக அரங்கக் கல்லூரி வழங்கும்

## “உயிர்த்த மனிதர் கூத்து”

(நாடகம்)

18.01.1992:- சனிக்கிழமை பி. ப. 5-00 மணி அளவெட்டி மாவீரர் கலையரங்கம்

19.01.1992:- ஞாயிற்றுக்கிழமை பி. ப. 4-00மணி மருதனாமடம் இராமநாதன் கல்லூரி

01.02.1992:- சனிக்கிழமை பி. ப. 3.30 மணி யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலை அரங்கு

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

அன்பளிப்பு: 10 ரூபா

விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக்கழகம்,

தலைமைச் செயலகம்,

தமிழீழம்.

(சி-3793)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ‘ஈழநாதம்’ பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 17 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது